பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 24 வெள்ளிக்கிழமை (06.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 192

# காத்தான்குடியில் மீண்டும் வன்முறை

# நேற்று 25 பேருக்கு வெட்டுக் காயங்கள்

## உடன் ஊரடங்கு அமுலுக்கு

மட்டக்களப்பு, ஜூன் 06

காத்தான்குடிப் பகுதியில் கடந்த நான்கு நாள்களாகப் பதற்றத்துடன் நீடித்த ஹர்த்தால் நடவடிக்கைகள் முடிவுக்கு வந்து நேற்றுக் காலை வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்ட போதிலும், ஓரிரு மணித்தியாலங்களில் - நேற்று முற்பகலே - அங்கு மீண்டும் வன்முறை வெடித்தது. தமிழர்கள், முஸ்லிம்கள் என மொத்தம் 24 பேர் கத்திவெட்டுக்காயங்களுக்கும், கல்வீச்சுக் காயங்களுக்கும் உள்ளானார்கள்.

நிலைமை மோசமடைந்ததை அடுத்து அப்பிரதேசத்தில் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டது.

தமிழ்ப் பிரதேசமான ஆரையம்பதிக்கு வர்த்தக நடவடிக்கைக்காகச் சென்ற முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் அங்கு கத்திக்குத்திற்கு இலக்கானார் என்று பரவிய தகவலைத் தொடர்ந்தே காத்தான்குடிப் பகுதியில் மீண்டும் வன்முறைகள் வெடித்தன.

மட்டக்களப்பு - கல்முனை வீதியில் பயணித்துக் கொண்டிருந்த தமிழர்கள் மீது கற்களையும் தடிகளையும் பயன்படுத்திக் கும்பல் ஒன்று தாக்குதல்களை மேற்கொண்டது.

இதில் மூன்று பெண்கள் உட்பட 16 தமிழர்கள் காயமடைந்தனர். இவர்களில் நால்வர் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் ஆரையம்பதி வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் வான் தாக்குதல்

கொழும்பு, ஜூன் 6

மன்னாரில் விடுதலைப் புலிகளின் பெரிய மடுக்குளம் முன்னரங்க நிலை மீது நேற்றுக் காலை 8.20 மணியளவில் விமானப்படையினரின் மிக்-27 ரக குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல்களை நடத்தின.

அப்பகுதியில் உள்ள விடுதலைப் புலி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் நேற்று வெடிபொருள்கள் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன் 06

வெள்ளவத்தை, 36 ஆவது ஒழுங்கையில் அமைந்துள்ள தனியார் கணினி நிலையம் ஒன்றிலிருந்து நேற்றுக்காலை சி- 4 வெடிபொருள்கள் உட்பட சில பொருள் என்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோயில் கரையோரங்களில் படை நிலைகள் மீது தாக்குதல்

### புலிகள் தரப்பில் அறிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 6

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கடற்கரையோரத்தில் உள்ள படையினரின் காவலரண்கள் மீது கடற்புலிகளின் சிறப்புக் கனரக அணியினர் தாக்குதல் நடத்தி பலத்த அழிவுகளை ஏற்படுத்தியுள்ளனர் என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறியவை வருமாறு:-

வடமராட்சி நாகர்கோவில் கடற் கரையோர காவலரண்கள் கடற்புலிகளின் சிறப்பு கனரக அணியினரால் நேற்று வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு தாக்கப்பட்டுள்ளன. இத்தாக்குதலில் படையினரின் 3 காவலரண்கள் முற்றாகத் தாக்கியழிக்கப்பட்டுள்ளன. 5 காலரண்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இதில் படைத் தரப்பி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியாக இ.த.விக்னராஜா நேற்று பதவிப்பிரமாணம்

### மாவட்ட நீதிபதி: வசந்த சேனன், மேலதிக மாவட்ட நீதிபதி: ஜோய் மகாதேவன்.

கொழும்பு, ஜூன் 06

மேல் நீதிமன்ற நீதிபதியாக இ.த.விக்னராஜா, எம். இளஞ்செழியன், திருமதி சந்திரமணி சிவபாலன், எஸ்.கலீல் ஆகியோர் நேற்று மாலை 5 மணிக்கு பதவிப் பிரமாணம் செய்து பதவியேற்றனர்.

பிரதம நீதியரசர் அலுவலகத்தில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா முன்னிலையில் இந்தப் பதவிப்பிரமாண நிகழ்வு நடை பெற்றது.



யாழ்.மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றிய இ.த.விக்னராஜா யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்.நீதிமன்றில் அமர்வுகளை ஆரம்பிக்கவுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தை பகுதியில் தேடுதல் 4 பெண்கள் உட்பட 40பேர் கைது!

கொழும்பு, ஜூன் 06

வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று மதியம் வரை மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் சந்தேகத்தின் பேரில் நான்கு பெண்கள் உட்பட 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தெஹிவளையில் பயணிகள் ரயிலை இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து, இத்தேடுதல் மேற்கொள்ளப்பட்டது என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலை வழி மறித்து சு.கவினர் ரயர் எரிப்பு

கொழும்பு, ஜூன்.06

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றைய நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்வதற்காகச் சென்ற சமயம் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அவரை வழிமறித்து அரசுத் தரப்பு ஆதரவாளர்கள் - நேற்று நாடாளுமன்ற சுற்று வட்டத்திற்கு முன்னால்- ரயர் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் சிலர் பஸ் ஒன்றில் வந்திறங்கி,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் பொலிஸார் இருவர் சூட்டுக்குப்பலி

கொழும்பு, ஜூன் 06

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுமாலை இடம்பெற்ற இரு வேறு சம்பவங்களில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். அத்துடன், மற்றொரு பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, கல்லடிப் பாலத்திற்கு அருகில் நேற்று மாலை காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மீது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுப் பகுதியில் கிளைமோர்; இரண்டு அப்பாவிப் பொதுமக்கள் பலி

கொழும்பு, ஜூன் 06

முல்லைத் தீவு மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் உள்ள பர்லைப்பாணியில் படையினரின் ஆழ ஊடுருவும் அணி நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் இருவர் பலியாகியுள்ளனர்.

மாந்தை கிழக்கு மூன்றுமுறிப்பு பாலைப் பாணியில் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வன்னிவிளாங்குளத்தைச் சேர்ந்தவர்கள் வீட்டுப்பொருள்களை ஏற்றி வருவதற்கு டிராக்டர் ஒன்றில் சென்றுகொண்டிருந்தபோது அவர்களை இலக்குவைத்து படையினர் இக்கிளைமோர்த் தாக்குதலை நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் டிராக்டரில் பயணித்த இரு பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

வன்னிவிளாங்குளத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொல்லர் புளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ராஜகுரு தர்மேஸ்வரன் (வயது - 25) வன்னி விளாங்குளத்தைச் சேர்ந்த எட்வின் ஜெயசீலன் அல்லது நாதன் (வயது - 45) ஆகியோரே மரணமானவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-சி)

## பயங்கரவாதம் மரணிக்கும் காலம் நெருங்கிவிட்டது என்கிறார் பிரதமர்

கொழும்பு, ஜூன் 06

பயங்கரவாதத்தின் குரல்வளை நசுக்கப்பட்டு அது முற்றாக மரணித்துப் போகும் காலம் நெருங்கிவிட்டது என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

இதற்காகப் படையினர் திட்டமிட்டு கிரமமாக செயற்பட்டு வருகின்றனர் எனக் கூறிய பிரதமர், மக்கள் அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றில் நேற்று அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

எமது நாடு பயங்கரவாதத்திடமிருந்து பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளது. முழு உலக நாடுகளும் இச்சவாலை எதிர்கொண்டு அதை முறியடிப்பதற்காகக் கைகோர்த்து நிற்கின்றன.

இந்த உதவியை நாமும் பெற்று பயங்கரவாதத்தை நசுக்கி வருகிறோம். பயங்கரவாதத்தின் குரல்வளை நசுக்கப்பட்டு அது மரணித்துப் போகும் நேரம் நெருங்கி

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## மாணிக்கம் இலிங்கப்பிள்ளை



[ஓய்வு பெற்ற ஆசிரியர்]

சரவணையைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ். வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் இலிங்கப்பிள்ளை நேற்று (05.06.2008) வியாழக்கிழமை சிவபத மெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும் வேலணை மேற்கு, தலைகாட்டி காலஞ்சென்ற சி.த.அருளம்பளம் - பத்தினிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், கீதா (ஆசிரியர், முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), சேந்தன் (கனடா), சுதா (நோர்வே), சுகிர்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆரூரன்(ஆசிரிய ஆலோசகர், தீவகம்), சசிலேகா (கனடா), விமலன் (நோர்வே), ஞானசுந்தரன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், - திட்டமிடல், திருகோணமலை) ஆகியோரின் மாமனாரும் விசாலாட்சி - கண்மணிப்பிள்ளை (தங்கலெட்சுமி), காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, பரராஜசிங்கம் மற்றும் தவமலர், காலஞ்சென்ற புனிதவதி, நமசிவாயம் நாகேஸ்வரி, சுப்பிரமணியம், சரஸ்வதி நவரட்ணலிங்கம், மகேஸ்வரி சிவானந்தன், பாலசுப்பிரமணியம், நீலாவதி - நகுலேசபிள்ளை, சியாமளா - கருணைநாதன் ஆகியோரின் மைத்துனரும் சந்திராம்பாளின் உடன்பிறவா சகோதரரும் கௌசியா, துசியா, அஞ்சலி, அபிராமி, விசாகன், கஜன், அத்தன், குகன், சரவணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (07.06.2008) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*155/1, கே.கே.எஸ். வீதி,*
*கொக்குவில்.* (75158)

தகவல்:
குடும்பத்தினர்

## செல்வன் மயூரன் முத்துராசா [துரை]

கொக்குவில் கிழக்கு, கோணவளை லேனைச் சேர்ந்த செல்வன் முத்துராசா மயூரன் நேற்று (05.06.2008) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் முத்துராசா - நிர்மலா தம்பதிகளின் அன்பு மகனும் கோசலா, சஞ்சீவினி, தசாங்கி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2008) வெள்ளிக்கிழமை பி.ப 2மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரிகைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*கோணாவளை லேன்,*
*கொக்குவில் கிழக்கு.*
T.P:0776650103

தகவல்:
இ.சபாரத்தினம்
(பேரன் - கிஷான் கபே)

## என்.ஆர்.கே.உதயகுமார்

இணுவில் கந்தசுவாமி கோயிலடியைச் சேர்ந்த தவில் வித்துவான் என்.ஆர்.கே.உதயகுமார் நேற்று (05.06.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் என்.ஆர்.கோவிந்தசாமி (நாதஸ்வரவித்துவான்) - தனபாக்கியம் தம்பதியரின் மகனும், அமரர் வசந்தகுமார், பத்மலோஜனா, விஜயகுமார் (ஹொலண்ட்), அமரர் உதிஸ்த்தகுமார், ரட்ணகுமார் (நாதஸ்வரவித்துவான்), சத்தியகுமார் (பிரான்ஸ்), வாகீஸ்வரன் (நாதஸ்வரவித்துவான்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2008) வெள்ளிக்கிழமை காலை நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கந்தசுவாமி கோயிலடி,*
*இணுவில்.*

தகவல்:
என்.ஆர்.கோவிந்தசாமி
குடும்பத்தினர்.

## திருமதி நகுலாம்பிகை இராசையா



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் மாங்கொல்லை, காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் தற்பொழுது கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நகுலாம்பிகை இராசையா (03.06.2008) செவ்வாய்க்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து- தையல்நாயகி தம்பதியினரின் மகளும், முத்தையா - இலக்குமிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், கதிர்காமநாதனின் பாசமிகு தாயாரும் இந்திராதேவியின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற ரோகினி, அன்னலட்சுமியின் (ஜேர்மனி) சகோதரியும், கோபால் அகல்யா (சுவிஸ்), கிரிதரன் சுகல்யா (கொழும்பு), கிருஸ்ணரூபன் நிரோஜா ஆகியோரின் பேர்த்தியும் சரோன், சயின், திசானா, கிதுஜா ஆகியோரின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2008) வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நந்தாவில் லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
கதிர்காமநாதன்(பாலா - மகன்)
ரூபன் (பேரன்)

## விபத்தில் வயோதிபர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

நுணாவில் ஏ-9 வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் வயோதிபர் காயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்று காலை இடம்பெற்றது.

சாவகச்சேரி பெரியமாவடியைச் சேர்ந்த மகேஸ்வரன் நடராசா (வயது 71) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (1-207)

## அத்தியாவசியப்பொருள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைப் பரப்பில் வதியும் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு கரித்தாஸ் நிறுவனத்தினர் அத்தியாவசிய உணவுப் பொருள்களை அந்தந்த கிளைகள் மூலம் வழங்கி வருகின்றனர்.

நான்கும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட சமுர்த்தி குடும்பங்களுக்கு அரிசி, கோதுமைமா, சீனி, பருப்பு ஆகிய அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் தொடக்கம் தினமும் இரண்டு கிளைக் கடைகளில் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (1-207)

## வடமராட்சி வலயத்தில் உடற்பயிற்சி செயலமர்வு

மந்திகை, ஜூன் 6

வடமராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான காலை உடற்பயிற்சி தொடர்பான செயன்முறைச் செயலமர்வு ஒன்றினை வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம் நடத்தவுள்ளது.

இச்செயன் முறைச் செயலமர்வு நெல்லியடி மத்திய மகாவித்தியால ஆசிரிய நிலையத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகவுள்ளது. வடமராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், முதன்மை ஆசிரியர்கள் ஆகியோரைப் பொருத்தமான உடையுடன் சமூகமளிக்குமாறு வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது. (1-218)

## இன்றைய ஆட்டங்கள்

குருநகர், ஜூன் 6

"தூய ஒளி" வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் உதைப்பந்தாட்டப் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு.

* பி.ப 3.00 - சென் நீக்கல்ஸ் 'ஏ' எதிர் சென் பீற்றர்ஸ்.
* பி.ப 4.00 - றோயல் வி.க எதிர் யாழ்.பல்கலைக்கழகம்
* பி.ப 5.00 - பாடுமீன்'பீ' எதிர் சென். அன்ரனீஸ் (பாஷையூர்) 'ஏ'

(1-51)

## ஆங்கில தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 6

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட ஆங்கில தின நாடகப் போட்டிகள் நாளை சனிக்கிழமை நடத்தப்படவுள்ளன.

ஆரம்பப் பிரிவு போட்டிகள் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையிலும் இடைநிலை, சிரேஷ்ட ஆகிய பிரிவு போட்டிகள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)


**படிவம்**

விவசாயக் கல்லூரி டிப்ளோமா கற்கை நெறி 2009/2011 அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

Bharathy Pathippakam,
430, K. K. S. Road, Jaffna.

**SHAMROCK**
J/EACHCHAMODDAI
O/L Day
(BEST TEACHERS)

**எம்புறோடிங் ரை**



நீண்டகால பாவனைக்கு உத்தரவாதம்
பாடசாலை மாணவர்களுக்குரிய ரை
69.00 லிருந்து
எஸ் . எஸ். யசோதரன் ஆட்ஸ்
212,கோவில் வீதி, நல்லூர்

**கார் விற்பனைக்கு**

மிகவும் நல்ல நிலையிலுள்ள 3 சிறி மைனர் கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு [illegible]
யாழ்ப்பாணம். 0779363247


## யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி 2008இல் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களை பாராட்டி வாழ்த்துகிறோம்.

I. **பொறியியற் துறை**
வரதராஜா ஜெயரூபன், குலேந்திரராஜா கஜந்தன்
பிலுஜா சிவானந்தன், சர்வானந்தன் சர்வகுமார்

II. **தகவல் தொழில் நுட்பம்**
நடராசமணி சிவாஸ்கர், தர்மி தர்மசேகரம்

III. **தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம்**
தவராஜா இளங்கோ, கிருஸ்ணபிள்ளை ஜெனகன்
சிதம்பரநாதன் ஜீவகநாதன், நடராஜன் கிரிதரன்
குமாரதேவன் நிரோஜன், ஸ்ரீஸ்கந்தராஜா பார்த்தீபன்
மார்க்கண்டு சுவாகரன், வரதராசா தனுசன்
இராஜேஸ்வரன் மோகனசரன், பாக்கியநாதன் ரஜீபன்
மித்திரா பாலசிங்கம், ரம்மியா ஸ்ரீகாந்தன்
சண்முகானந்தன் ஜெகநாதன், ராதை சுபாஸ்கர்
தனோ அன்ரனிசா அன்ரனிதாஸ்
துவாரகா அருந்தவ விநாயகமூர்த்தி

IV. **பௌதிக விஞ்ஞானம்**
சிவசுந்தரம் பிரணவன், பஞ்சலிங்கம் அஜந்தன்
சதாசிவம் பிரதீபன், கணேஷ் விஜிகரன்
இராசலிங்கம் கோப்பிரியன்

V. **அளவையியல் விஞ்ஞானம்**
செல்வகுமார் பிரதீப்

VI. **மருத்துவம்**
முருகவேல் மயூரன், தேவரஞ்சனா புவனேந்திரன்

VII. **விலங்கு விஞ்ஞானம்**
கதிர்காமேஸ்வரன் கவிதாஸ்

VIII. **உயிரியல் விஞ்ஞானம்**
குலசிங்கம் கஜவர்ணன்

IX. **பிரயோக விஞ்ஞானம் (உயிரியல்)**
சிவகுருநாதன் விஜயதீபன்

X. **விவசாய விஞ்ஞானம்**
அழகேசன் அமிர்தலோஜனன், யோகநாதன் சஞ்சீவன்

XI. **தாதியியல்**
சிந்துஜா சிவானந்தம், விக்னேஸ்வரி கிருஸ்ணபிள்ளை

XII. **சுகாதார அபிவிருத்தி**
லக்சினா இராமஜெயம்

XIII. **உணவும் வடிவமும்**
வாணி நடராஜசுந்தரம்

XIV. **முகாமைத்துவம்**
ஏலாளசிங்கம் ஜெயரூபன், சிவமூர்த்தி மஞ்சுதன்
சித்திவிநாயமூர்த்தி நிருஜன், குணசேகரம் சுரேன்
பாலச்சந்திரன் தர்சன், யோகர்த்தினம் தினேஷ்பாபு
பத்மநாதன் அஜித்

XV. **கலை**
வலஜி சிவஞானராஜா

XVI. **நுண்கலை**
கலைப்பிரியா கந்தசாமிசர்மா, கிருத்திகா சண்முகலிங்கம்
சரண்யா முருகானந்தன்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
பழைய மாணவர் சங்கம். (சி/553146)

## துயர்பகிர்கின்றோம்



எமது இனிய நண்பன்

அமரர்

**யோகரட்ணம் கீதன்**

அகால மரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைவதுடன் அன்னாரின் மறைவினால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

•ஈச்சமோட்டை வாழ்
நண்பர்கள்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**தூசைப்பிள்ளை அத்தானாசிப்பிள்ளை**

மண்ணில்
17 * 05 * 1933

மறைவு
07 * 05 * 2008

திண்ணிய திடவுழைப்பில் தேடித்திரு சேர்த்து
பொன்னோடு பொருளோடு மின்னும் புகழோடும்
வண்ணமுற வளர்த்துலகில் வளமோடு வாழவைத்து
விண்ணேகி இன்னலிலும் வழிகாட்டும் ஒளிச்சுடரே
மண்ணுலகில் நின்பணியும் - நெறியும் தொடர்ந்து
விண்ணுள்ளவரை விழி நனைவோம்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (75155)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன கற்றல், கற்பித்தல் முறைகளுக்கேற்ற வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் இயங்கும் தொண்டைமானாறு கெருடாவில் இ.த.க. பாடசாலை



அதிபர்
துரைசிங்கம் அருந்தவராசா

தொண்டைமானாறு கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை பல தேவைகள் மத்தியிலும் சிறப்புடன் இயங்கி வருகின்றது. ஆசிரியர், மாணவர்கள்




ஆகியோரின் ஆர்வமும் அக்கறையும் தான் பாடாசலையின் முன்னேற்றத்துக்குக் காரணம். எனினும் பெற்றோர் அக்கறை காட்டாமையால் பாடாசாலை சில செயற்பாடுகளில் பின்நிற்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இப்பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை முன்பு 200 இற்கும் அதிகமாக




இருந்தது. தற்போது 62 பெண்பிள்ளைகளும் 71 ஆண்பிள்ளைகளுமாக மொத்தம் 136 மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். 12 ஆசிரியர்கள் (அதிபர் உட்பட) கடமையாற்றுகின்றார்கள்.

பாடசாலையின் நிலை தொடர்பாக அதிபர் துரைசிங்கம் அருந்தவராசா தெரிவித்ததாவது:

இப்பாடசாலை 1918இல் ஓலைக் கொட்டில் பாடசாலையாக அவ்வூர்ப் பிரமுகரான பொ.செல்வநாயகக் குருக்களால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. 1922இல் அரச நன்கொடை பெறும் பாடசாலையாக 5ஆம் வகுப்பு வரை ஆரம்பமானது. 1930இல் கனிஷ்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டு 8ஆம் வகுப்பு வரை நடைபெற்று வருகின்றது. 1956இல் சைவ அபிவிருத்திச் சங்க முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருந்து வருகின்றது. 1986முதல் இன்று வரை கனிஷ்ட பாடசாலையாக இது இயங்கிவருகின்றது.

தளபாடப் பற்றாக்குறை நிலவுகின்

## பாடசாலையை மேலும் முன்னேற்றுவதற்கு பெற்றோரின் ஒத்துழைப்பு மிக அவசியம்

றது. அத்துடன் போதிய கட்டட வசதிகளும் இல்லை. மாணவர்களுக்கான மேசை, கதிரைகள் போதியளவு இல்லை. பாடசாலைக் கட்டடத்தின் கூரை, மரங்கள் மிகவும் பழைமை வாய்ந்தனவாக உள்ளதால் கட்டடங்கள் இடிந்தும் கூரை மரங்கள் முறிந்த நிலையிலும் உள்ளன. மாணவர்களுக்கான விஞ்ஞானகூடம் இல்லை. ஆசிரியர்களுக்கான ஓய்வு அறை இல்லை. மாணவர்களுக்கு உணவு சமைப்பதற்கென சமையலறை வசதியும் இல்லை.

நூலகம் அமைக்கப்படவில்லை. பாடசாலை வளாகத்துக்குப் பாதுகாப்பு வேலிகள் இல்லை. புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டபோதும் அதன் பிளாட்டின் சில பாகங்கள் எந்நேரமும் மாணவர்கள் தலையில் இடிந்து விழக்கூடிய அபாயம் காணப்படுகின்றது. உரிய இடங்களில் இதுபற்றி முறையிட்டபோதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பாடசாலையில் கிணறு ஒன்று உள்ளது. அக்கிணற்றினை துப்புரவு செய்வதற்கு எம்மிடம் போதிய நிதி இல்லை. இதனால் மாணவர்கள் குடிதண்ணீர் பிரச்சினையை எதிர்கொள்கிறார்கள்.

கல்வி கற்கும் ஆசிரியர்கள் அனைவரும் சளைக்காது தமது சேவையை சிறப்புடன் செய்கிறார்கள்.

இதன் காரணமாக புலமைப் பரிசில் பரீட்சையில் 1995இல் 5 மாணவர்களும், 1996இல் 2 மாணவர்களும், 1997இல் ஒரு மாணவனும், 2000இல் 2 மாணவரும், 2002இல் 2 மாணவரும், 2004இல் 5 மாணவர்களும் 2006இல் ஒரு மாணவனும், 2007இல் 3 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர் - என்றார்.

அதிபருக்கென ஒரு காரியாலயம் இல்லை. அதிபர் பயன்படுத்தும் அறையில் பாடசாலைத் தளபாடங்கள், உடைந்த மேசை, கதிரை, அலுமாரி போன்றவை உள்ளன.

தற்போது பாடசாலைகளில் மதிய உணவு வழங்கப்படுகின்றது. இது உண்மையில் பாதுகாப்பான அறைகளில் வைத்துச் சமைத்து வழங்கப்படவேண்டும். இதற்கான வசதிகளை கல்வி வலயமோ மாணவர்களின் பெற்றார்களோ ஏற்படுத்திக் கொடுக்கவில்லை.

திறந்தவெளியாக உள்ள கிடுகினால்



புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான நிவேதினி தவனேசன், ரம்பியா ரஞ்சன், சொர்ணவடிவேல் ஐயர் கௌதமன் ஐயர்

சிறிது மறைக்கப்பட்ட கொட்டிலில் வைத்தே சமையல் நடைபெறுகின்றது.

பெற்றோர் தமக்கு அருகேயுள்ள உயர் வகுப்புப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதற்காக கூட்டிச் செல்வதால் இப்பாடசாலையில் மாணவர் தொகை குறைந்து வருகின்றது.

கல்வி வலயங்கள் மாணவர்களுக்

**வல்லழகனார்**

கான ஆய்வுகூட வசதிகள், உபகரணங்கள் போன்றவற்றுடன் நூலக வசதிகள் போன்றவற்றையும் வழங்கி உதவ முன்வரவேண்டும். அத்துடன் ஆசிரியர் தங்குமிட வசதிகள், தளபாட வசதிகள் என் பனவற்றையும் ஏற்படுத்தித் தரவேண்டும் - என்றார் அதிபர்.

# கணனியும் மனித வாழ்வில் அதன் பயன்பாடும்

**இக்கட்டுரையின் ஒரு பகுதி கடந்த 02.06.2008 உதயன் கல்விப்புனல் பகுதியில் வெளியானது. அதன் இரண்டாவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.**

### கணனியின் பொது அமைப்பு

(1) உள்ளிருப்பு (இன்புட்) (2) சேகரித்து வைத்தல் (ஸ்டோரேஜ்) (3) செயற்படுத்தல் (பிராசஸ்) (4) வெளிப்பெறுதல் (அவுட்புட்) இந்த இயக்கங்கள் செய்ய தேவையான அலகுகள் தனித்தனியே ஒவ்வொரு கணனியிலும் உண்டு, கணக்கு அலகு இயக்கங்களைச் செய்கிறது. நினைவு அலகு இயக்கங்களைச் செய்கிறது. நினைவு அலகு விவரங்களைச் சேகரித்து வைத்துக்கொண்டு தேவைப்படும் போது தருகிறது. கட்டுப்பாட்டு அலகு, உள்ளீப்பை பெற்று இந்த இரண்டு அலகுகளுக்கும் கொடுத்து விடையினைப் பெற்று, வெளிப்பேறு அலகிற்குக் கொடுக்கிறது. கணக்கு அலகு மற்றும் நினைவு அலகின் இயக்கங்களைக் கட்டப்படுத்துவதால் அதற்குக் கட்டுப்பாட்டு அலகு என்று பெயர். இவை மூன்றும் சேர்ந்து பொதுவாக மையச் செயற்பாட்டலகு (சி.பி.யு) அல்லது சென்ரல் பிராசிங் யூனிட் என்று அழைக்கப்படும்.

### கணனிப் பிரிவுகள்

கணனி இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (1) காட்வயர் (2) சொவ்வெயர்.

(1) காட்வெயர் என்பது கட்டமைப்பினைக் குறிக்கிறது. மின்னணுவியல் சுற்றுக்கள் சுற்றுக் கருவிகள் காட்டும் அலகு ஆகியவை இதில் அடங்கும்.

(2) சொவ்வெயர் என்பது கம்பியூட்டரை இயக்குவதற்குப் பயன்படுத்தும் திட்டங்களாகும். இயக்கத்திட்டங்கள், மொழி பெயர்ப்பு வசதிகள், பயனீட்டுத் திட்டங்கள் அனைத்தும் காட்வெயார் என்னும் பிரிவில் அடங்கும்.

### கணனி மொழிகள்

ஒரு கணனியின் நோக்கம் நாம் குறிப்பிட்ட கணக்கிற்கு விடை கொடுப்பது, பிரச்சினைக்கு தீர்வு அளிப்பது, அதாவது தேவையான வேலையைச் செய்து முடிப்பது, அவ்வேலைகளைத் தானாகச் செய்யாது. அவ்வேலைகளைச் செய்வதற்கு வேண்டிய உத்தரவுகளைத் திட்டங்களுக்கு ஏற்ப அளிக்கவேண்டும். எந்த உத்தரவுகளையும் தேவையான முடிவைச் செயற்பாட்டிற்குப் பின் தரக்கூடிய வரிசையில் அந்த உத்தரவுகள் அழைக்கப்படவேண்டும். ஏனென்றால் அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக கணனி நிறைவேற்றுகிறது. மேலும் எந்தவோர் உத்தரவையும் மிகச் சாதாரணமானது என்று




கருதி விட்டு விடலாகாது.

### கணனியின் பயன்கள்

கணிப்புகள், விவரங்களைத் தொகுத்தல், விவரங்களைத் சேர்த்து வைத்தல், விவரங்களைத் திரும்பப் பெறுதல், உண்மையான சூழ்நிலைகளை மாதிரிப்படுத்தல், செய்தித் தொடர்புச் செயல்பாடுகள், தனிப்பட்ட பயனீட்டாளர் தேவைக்கேற்ப விவரங்களை வகைப்படுத்தி சேர்த்து வைத்து தேவையானபோது கொடுத்து உதவுகிறது.

### விவரங்கள் பெறுதல்

விவரங்களை கம்பூட்டரில் சேர்த்து வைத்தல் எத்துணை எளிதோ அது போன்றே விவரங்களை கம்பூட்டரில் இருந்து திரும்பவும் பெறுவது. விவரங்களின் பெயர் அல்லது எண்தெரிந்தால் விவரங்களை எடுக்கலாம்.

### பொது வர்த்தக விவர நிர்வாகம்

தொழிலாளர்கள் அவர்களுடைய சம்பள விகிதம் கணனியில் பதிவு செய்யப்படும் தொழிலாளர்கள் சேர்வதும், விலகுவதும், சம்பள மாறுதலும் அவ்வவ்போது கணனிக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும். மாதம் மாதம் யார் யாருக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கவேண்டும் என்பதை உரிய நாளில் கம்பியூட்டரில் இருந்து பெற்று கழிப்பு விவரங்களையும் தெரிந்து உரிய முறையில் இலகுவாகச் செய்யலாம். அது மட்டுமன்றி அவர்களுக்கு செலுத்த வேண்டிய வைப்புநிதி, வருமானவரி ஆகியவற்றையும் கணக்கிட்டுச் செலுத்தலாம். இவ்வாறு மேலதிக விவரங்களையும் கணனியில் மீண்டும் பதிவு செய்து கொள்ளலாம்.

### வங்கிகளில்...

வங்கிகளில் கணக்கு வைத்திருப்பவர்களின் விவரங்கள் இருந்தால் அவற்றை அடையாளம் கண்டு உடனடியாகப் பணம் அளிக்கமுடியும். பல வங்கிகளின் கணக்குகள் ஒருங்கிணைக்கப்பட்டால் ஒரு வங்கிக் கிளையின் பணம் இருப்பில் இருந்தால் மறு வங்கிக் கிளையில் பணம் பெறுவது சாத்தியமாகிறது.

### மருத்துவ நிலையங்களில்

அங்கு அனுமதிக்கப்பட்ட நோயாளிகள், வார்டுகள், வசதிகள், மருத்துவர்கள் பற்றிய முழு விவரங்களையும் கணனியில் பதிவுசெய்து கொள்ளலாம். நோயாளிகளை அனுமதிப்பதற்கு இடவசதி உள்ளதா? சத்திர சிகிச்சை யார், யாருக்கு செய்ய வேண்டும், எந்த எந்த வைத்திய நிபுணர்களால் செய்யவேண்டும் என அறிந்து அடுத்து எப்போது செய்யலாம் என்னும் கேள்விகளுக்கு விடைகளும் கணனிகளே அளிக்க இயலும்.

### அறிவியல், பொறியியல் பயன்கள்

கணனி கொடுக்கப்பட்ட பிரச்சினைகளை மிக வேகமாகக் கையாண்டு தீர்ப்புகளை கொடுப்பதால் கணக்கியல் மொழிகளைப் பெரிதும் பயன்படுத்தும் அறிவியல், பொறியியல் துறையில் வெகுவாகப் பயன்படுகின்றன. எவ்வகைப் பகுப்பாய்வு புள்ளி விவர ஆய்வு, கணக்கீடு, வடிவமைப்புக் கணக்கீடு ஆகியவை இடம், மொழிகளின் துணையோடு எளிதில் செய்யப்படுகின்றன.

### நிர்வாக விவரங்கள்

நிர்வாகப் பெறுப்பில் இருக்கும் பல அலுவலர்கள் பல்வேறு விவரங்களை கணனியில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். அவரது பதவிப் பெறுப்பிற்கேற்ப, திட்டமிடுதலுக்கோ, முடிவுகள் எடுப்பதற்கோ, அன்றாட இயக்கங்களுக்கோ, அவர் முடிவுகளைப் பயன்படுத்த வேண்டியிருக்கும்.

### தகவல் தொடர்பு

கணனியின் உதவியால் செய்திகள் அனுப்பப்படும்போது செய்திகளை பெறுவதற்கு வேண்டிய நபர் இல்லாவிட்டாலும் செய்தியின் தன்மையை அறிந்து அதனைச் சேர்த்து வைப்பதற்கோ, அவர் சென்ற இடம் தேடி அனுப்புவதற்கோ முடிகிறது. வீட்டில் இருந்து அலுவலகத்துடனோ அல்லது வெளி ஊரில் உள்ள வேறு அலுவலகர்களுடன் தொடர்பு கொள்ளவோ உதவுகின்றது.

### கணனியும் மனிதனும்

*வேலை வாய்ப்பு:-* கணனியால் மனிதனது வேலை வாய்ப்புக்கள் பாதிக்கப்படுமா? இது எல்லோர் பயமும். ஆனால் கணனியின் துணைகொண்டு செயல் ஆற்றும்போது உற்பத்தித்திறன் அதிகரிக்கின்றது. உற்பத்தியின் தரமும் அதிகரிக்கின்றது. கணனியால் பல வேலைவாய்ப்புக்கள் இழப்பது உண்மையே. ஆனால் கணனியால் பல வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. இதன் அடிப்படை பாகங்களை உற்பத்தி செய்வதற்கும், கணனி விற்பனை, உற்பத்தி, விற்பனைப் பயிற்சி, கணனி இயக்குதல், திட்டமிடல், நிறுவுதல் ஆகிய துறைகளில் வேலை வாய்ப்புக்கள் உள்ளன. கணனி தனிமனிதன் மாதிரி இல்லாது அதாவது களைப்போ அல்லது சலிப்போ இல்லாது சாதாரண மனிதனைப் போல் சேவையை மட்டுப்படுத்திக்கொள்ளாமல் பணியாற்றக்கூடியது.

### நிர்ணயிப்பது மனிதன்

தனிமனிதனை விட விரைவாகவும், துல்லியமாகவும் செயல்படக் கூடியவை தான். கணனிகள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அவை சிறந்தவை ஆன போதிலும் இயற்கை அறிவு கொண்டவை அல்ல. அதாவது கணனியைச் செயற்பட வைப்பவன் மனிதன்தான். அவற்றை எவ்வாறு செயற்படச்செய்யவேண்டும் என்று நிர்ணயிப்பதே அவன் கையில்தான் உள்ளது. *(வளரும்)*



திருமதி ராஜநாயகி கதிர்காமநாதன்
[B.A.Dip. in Computer Science (Canada)]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூசணி அம்மன் பெருந்திருவிழா புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பம்

நல்லூர், ஜூன் 6

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினை நாகபூசணி அம்மன் ...ய பெருந்திருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை கொடி...ற்றத்...ன் ஆரம்பமானது.

கொடியேற்றத் திருவிழாவில் குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்தும் பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

திருவிழாவை முன்னிட்டு ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் நலனைக் கருத்திற்கொண்டு விசேட பஸ்சேவை மற்றும் படகு சேவைகள் என்பன நடத்தப்பட்டு வருகின்றன.

யாழ். நகரில் இருந்து குறிகட்டுவான் வரையான போக்குவரத்துச் சேவையில் இலங்கை போக்குவரத்துச் சபையும், தனியார் பஸ் சேவையும் விசேடமாக இடம்பெற்று வருகின்றன. பெருமளவான பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றம் இடம்பெற்றது. (202-111)


## கண்ணீர் அஞ்சலி



(75107)

**ப.சச்சிதானந்தன்**

(முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, மானிப்பாய்)

அவர்களது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

**புதிய துர்க்கா வெதுப்பகம்,**
கொக்குவில் கிழக்கு.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
பரீட்சை நேரமாற்றம் தொடர்பான அறிவித்தல்
வெளிவாரிப் பரீட்சைகள்- 2007
வணிகமாணி பகுதி- II- 2004 &2005

மேற்படி 07.06.2008 (சனிக்கிழமை) அன்று நடத்தப்பட விருந்த வியாபார கணிதமும், புள்ளிவிவரவியலும் (EX. COM 3.5) Business Mathematics & Statistics பாட அலகுக்கான தேர்வு, தவிர்க்கமுடியாத காரணத்தினால் 09.06.2008 (திங்கட்கிழமை) பிற்பகல் 1.00 மணி தொடக்கம் 4.00 மணிவரை வெளிவாரிப்பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகில் அமைந்துள்ள பரீட்சை மண்டபத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றேன்.

**பதிவாளர்.**
04.06.2008 (சி/553143)



MINISTRY OF CONSTRUCTION AND ENGINEERING SERVICES
DEPARTMENT OF BUILDINGS
**INVITATION FOR BIDS**

Referring to the above advertisement appeared on 05.06.2008, a printing error has been noted in the 3rd section. The 2nd part of the sentence must be read as M6/ C7 but not as M6/ C1. The error is regretted please.

**Advt. Manager.**



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
28
★
07
★
1945



உதிர்வு
07
★
05
★
2008

அமரர்
**அப்புத்துரை திலகவதி**

பத்துமாதம் எமைச்சுமந்து
பத்திரமாய் எமை வளர்த்து
உலகிற்கே எமைத்தந்த
உயர் தெய்வம் அன்னை தாயே
உதிரத்தை பாலாக்கி
உணவாக எமக்களித்து
கண்முன்னே உலவி வந்த
கடவுள் தானே எம் அன்னை
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

கடந்த 07.06.2008 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தாயின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (06.06.2008) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் எமது தாயின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கிறோம்.

K.K.S. றோட்,
மாவடி, சுன்னாகம். (75152) குடும்பத்தினர்.


# யுத்தம் மூலம் தீர்வு என்று கருதி அரசு சிறுபான்மையினரை அடக்குகின்றது

## எதிர்த்துப் போராடுவதில் உறுதி என்கிறார் ஹக்கீம்

கொழும்பு, ஜூன் 6

யுத்தம் மூலம் மாத்திரமே தேசியப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என்று கூறிக்கொண்டு, சிறுபான்மை இன மக்களையும் ஜனநாயகத்தையும் இந்த அரசு அடக்கி ஒடுக்குகின்றது என்று குற்றம் சுமத்தியிருக்கிறார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம். அரசின் இந்தப் பிழையான நடவடிக்கைக்கு எதிராகத் தாங்கள் தொடர்ந்து போராடப்போவதாகவும் எனவும் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் அங்குரார்ப்பண அமர்வைப் பகிஷ்கரித்தமை கூட அந்தப் போராட்டத்தின் ஒரு பகுதிதான் என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐ.தே.கட்சி - ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் கூட்டின் மாகாண சபை உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மோசடிகள் மூலமே அரசு வெற்றி பெற்றது.

பதவிக்காக நாம் இத்தேர்தலில் போட்டியிடவில்லை. தேர்தலின்போது அதை நாம் மிகத் தெளிவாகக் கூறியிருந்தோம்.

கிழக்கு மாகாணத்தில் சிறுபான்மை இன மக்களின் உரிமைகளையும், ஜனநாயகத்தையும், இன உறவையும் பாதுகாப்பதற்காகவே நாம் போட்டியிட்டோம்.

இந்த அரசு யுத்தம் மூலம் மாத்திரமே தேசியப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று கூறிக்கொண்டு அந்த யுத்தத்தின் ஊடாகச் சிறுபான்மை இன மக்களை அடக்கி ஒடுக்குகின்றது. அவர்களின் உரிமைகளை மீறுகின்றது.

சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக இந்த அரசால் மேற்கொள்ளப்படும் அநியாயங்களுக்கு எதிராக நாம் தொடர்ந்து போராடுவோம்.

கிழக்கு மாகாண சபையின் முதல் அமர்வை நாம் பகிஷ்கரித்தமை கூட எமது போராட்ட வடிவில் ஒன்றுதான். இது ஓர் அடையாள நடவடிக்கை - என்றார். (சி)

## பங்கீட்டு அட்டைக்கு அரிசி, மா

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் சகல பங்கீட்டு அட்டைக்கும் அரிசி, கோதுமை மா வழங்கப்பட்டு வருகின்றது.

குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பொருள்கள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் கப்பலில் கொண்டுவரப்பட்ட அரிசி, கோதுமை மா ஆகியன பங்கீட்டு அட்டைகளுக்கு வழங்கப்படு வதாக தெரிவிக்கப்பட்டது.

## உலக சுற்றாடல் தின நிகழ்வு

நல்லூர், ஜூன் 06

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் 'எளியதோர் வாழ்வு நிலைபேருளதோர் எதிர்காலம்' என்ற பொருளில் உலக சுற் றாடல் தின நிகழ்வுகள் இடம்பெறும்.

யாழ். உதவி பிரதேச செயலர் மரியதாஸன் ஜெகூ தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) சி.சிவகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக மத்திய சுற்றாடல் அதிகார சபை உதவிப்பணிப்பாளர் திருமதி. வி. சத்தியகுமார், கால்நடைவளர்ப்போர் கூட் டுறவுச்சங்கத் தலைவர் வி. குணபாகன் ஆகியோர்கலந்துகொள்வர்.

நிகழ்வில் பரிசளிப்பு, வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (202-111)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சக மாணவன் ச:யசிந்தன் அவர்களின் அன்புத் தந்தை
**திரு.வ.சண்முகநாதன்**
05.06.2008 அன்று காலமானார். அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மாணவர்கள்** (12F Com. A/L 2010),
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.



## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Hero Honda 100 SS மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: S.சங்கர்
156, பங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.
(75148) 0779813538.



## மணமகன்கள் தேவை

1976 இல் பிறந்த (அச்சுவினி 3ஆம் பாவம், 69 பாவம்) இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியைக்கும் (உள்நாட்டு மணமகன் விரும்பத்தக்கது) 1980 இல் பிறந்த (திருவோணம் 3ஆம் பாதம், 114 பாவம்) பட்டப் படிப்பு படித்துக் கொண்டிருக்கும் பெண்ணுக்கும் பெற்றோர் அரச உத்தி யோகம் அல்லது சொந்த தொழில் பார்க்கும் தகுந்த மணமகன்களை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: விளம்பர இல. 3107 மே/பா உதயன்.



## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாக இருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரி சுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே, என் வாழ்வின் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்றதுணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன்.

என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும், எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

**பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி.**
J.M.S



## இலங்கை மின்சார சபை - யாழ். பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்த வேலைகளைச் செய்யும்பொருட்டுநாளை (07.06.2008) சனிக்கிழமைகாலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம்,

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.
2008.06.04

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு க் கைகொடுக்கும்"
இலங்கை மின்சாரசபை. (சி/553138)



## கண்ணீர் அஞ்சலி

ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டப ஸ்தாபகர்
திரு. **வே.சிவசுந்தரம்** அவர்களின் அன்பு மாமன்
**வைரமுத்து வடிவேலு** (ஓய்வு பெற்ற P.W.D ஓவசியர்) அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆலோசனை சபையும், ஊழியரும்,**
சிவசக்தி மணிமண்டபம்,
ஆவரங்கால். (75145)



## கண்ணீர் அஞ்சலி


இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு) திடீர் பரிசோதனைக்குழு பொறுப்பதிகாரி
திரு. கே.யோகரட்ணம் அவர்களின் புதல்வன்
**யோ.கீதன்**
அவர்கள் 31.05.2008 அன்று அகால மரணமடைந்த செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் கவலையுமடைந்துள்ளோம்.



அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

இ.போ.ச.(வடக்கு), கோண்டாவில். பிரதான பிராந்திய முகாமையாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள். (சி/553139)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி இந்த ஆண்டுக்கான மாவட்டச் சம்பி யனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.
மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட மானிப்பாய் மகளிர் கல்லூரி உடற்பயிற்சி நிகழ்வில் சில கட்டங்களைப் படத்தில் காணலாம்.
கடந்த ஆண்டு தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட இக்கல்லூரி இந்த மாதம் வடமாகாண மட்டத்தில் இடம்பெறவுள்ள போட்டிகளில் கலந்துகொள்வதற்காக வவுனியாவுக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (படங்கள்: நேசன்)

# பாடசாலைகளின் மென்பந்தாட்டத்தில் யாழ்.இந்து மாவட்டச் சம்பியனானது

வலி.வடக்கு, ஜூன்6

யாழ்.மாவட்டப் பாடசாலை, அணிகளுக்கிடையே இடம்பெற்ற 15 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வெற்றி பெற்று யாழ்.மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயமும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயம் 8.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 22 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

குகதாஸ் 05 ஆகக்கூடிய ஓட்டங்களாக பெற்றுக்கொண்டார். அணியின் வீரர்கள் பெற்றுக்கொண்ட ஓட்டங்கள் 09 ஆக இருக்க உதிரிகளாக வழங்கப்பட்ட ஓட்டங்கள் 13 ஓட்டங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சுதாகரன் 02 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டங்களைக் கொடுத்து 04 விக்கெட்டுகளையும் டிலான் 03 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டங்களை கொடுத்து 03 விக்கெட்டுகளையும் சுரேஷ் 02 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டத்திற்கு ஒரு விக்கெட்டையும் சங்கீதன் 2.3 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 09 ஓவர்களில் 06 விக்கெட்டுகளை இழந்து 23 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கைஅடைந்தது.

சுதாகரன் 07, பிரியதர்சன் 06 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

குகதாசன் 03 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், பரணிதரன் 03 ஓவர்கள் பந்துவீசி 05 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், பிரியகுகன் 03 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இந்தப் போட்டியில் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலய வீரர்கள் நால்வர் தவிர ஏனைய வீரர்கள் எந்தவோர் ஓட்டத்தையும் பெறவில்லை என்பதையும், இதேவேளை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீரர்கள் பந்து வீச்சில் உதிரிகளாக 13 ஓட்டங்களைக் கொடுத்துள்ளமையும் சுட்டிக்காட்டக்கூடியதாகும்.

3ஆம் இடத்திற்கான போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டதில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (1-86)




## அல்வாயில் நாளை துடுப்பாட்டம் ஆரம்பம்

வடமராட்சி,ஜூன்6

அல்வாய் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 15 ஆம் ஆண்டு நிறைவையொட்டிய மாபெரும் 20x20 துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி நாளை சனிக்கிழமை மாலிசந்தி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதிவரை இடம்பெறும் இச்சுற்றுப்போட்டியில் வடமராட்சியில் பதிவுசெய்யப்பட்ட 28 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.

இரு அணிகளாக இடம்பெறும் இப்போட்டியில் எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு கரவெட்டி மகேசன் விளையாட்டுக் கழகமும், அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகமும், அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு வதிரி பொம்மேர்ஸ் விளையாட்டுக் கழகமும், கரவெட்டி விபுலானந்தா விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (1-236)

# 'ஜொலிஸ்ரார்' சுற்றுப்போட்டி

## இறுதி ஆட்டத்துக்குப் பற்றீசியன்ஸ் தகுதி

வலி.வடக்கு, ஜூன்6

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஈ.எஸ்.பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய விலகல் முறையிலான கிரிக்கெட் அரை இறுதி ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் 59 ஓட்டங்களினால் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும், பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் 29 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

நிலோஜன் 30, பத்மமுரளி 27, யவதீசன் 20 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

ஜனார்த்தனன் 06 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 25 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், உமாகரன் 05 ஓவர்கள் பந்துவீசி 40 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், நாதன் 06 ஓவர்கள் பந்துவீசி 35 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், நிரூஜன் 06 ஓவர்கள் பந்துவீசி 43 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் சுதாகரன் ஓர் ஓவர் பந்துவீசி 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பகீதரன் 06 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைபற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 24 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

நிரூஜன் 44, நிரஞ்சன் 15, சுதாகரன் 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

லவதீசன் 04 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் சஜீபன் 04 ஓவர்கள் பந்துவீசி 11 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும், நிலோஜன் 05 ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் பாலமுரளி 02 ஓவர்கள் பந்து வீசி19 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

## கொக்குவில் ஸி.ஸி.ஸி. வெற்றி

வலி.வடக்கு, ஜூன்6

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஈ.எஸ்.பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய விலகல் முறையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கால்இறுதி ஆட்டமொன்றில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சுன்னாகம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 09 விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. வில்வக்குமரன் 60, வாகீசன் 51, தயான் 44 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்கள்.

சசிவண்ணன் 05 ஓவர்கள் பந்துவீசி 39 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும், றஜித் 06 ஓவர்கள் பந்துவீசி 46 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் லோறன்ஸ் 03 ஓவர்கள் பந்துவீசி 29 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் மற்றும் நிரோஜன், சதீஸ்கண்ணா, கஜீவன் முறையே 29, 39, 45 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடி யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 25 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 203 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

சசிவண்ணன் 40, யசிதரன் 37, கெலன்ட் 35, றஜித் 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

பிரதீபன் 06 ஓவர்கள் பந்துவீசி 28 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும், ஜங்கரன் 04 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், நதீஸ்வரன் 04 ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், றொபேசன் 3.3 ஓவர்கள் பந்துவீசி 33 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)





புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் உதைபந்தாட்டப் பயிற்சி முகாம் ஒன்று அண்மையில் இடம்பெற்றது. கலைமதி விளையாட்டுக் கழகத் தலைவருடன் பயிற்றுவிப்பாளர்களான த.கருணாகரன், க.ரவிச்சந்திரன் ஆகியோர் நிற்பதையும் பயிற்சி அளிக்கப்படுவதையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி- பெருங்குளம்.
திவ்விய மகோற்சவ விஞ்ஞாபனம்- 2008
ஸ்ரீஅம்பலவாண வீரகத்தி விநாயகர் அடியார்களே
**கிரியாகால நிகழ்வுகள்**

09.06.2008 திங்கட்கிழமை பகல்
10.30 மணிக்கு கொடியேற்றம்
16.06.2008 திங்கட்கிழமை மாலை
4.00 மணிக்கு சப்பறத் திருவிழா
17.06.2008 செவ்வாய்க்கிழமை பகல்
10.30 மணிக்கு இரதோற்சவம்
18.06.2008 புதன்கிழமை
10.30 மணிக்கு தீர்த்தம்
19.06.2008 வியாழக்கிழமை மாலை
3.00 மணிக்கு பூங்காவனம்

மஹோற்சவ தேவஸ்தான பிரதமகுரு:
ஸ்ரீ விஸ்ணு ஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்
(பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்).

பெருங்குளம்,
கல்வயல், சாவகச்சேரி. (75130)
**தேவஸ்தான பரிபாலன சபை.**

# வாராந்த நிகழ்வு

வடமராட்சி, ஜூன்6

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை,சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர்கல்லூரி மாணவி செல்வி குகராஜா சிவானுஜா பக்தி இசை வழங்குவார். (202-236)

# பிறந்தநாள் வாழ்த்து

நோர்வேயில் வசிக்கும்
திரு.திருமதி
விஜயகுமார்- ரேணுகா
தம்பதியரின் செல்வப் புதல்வன்
**வருண்** தனது முதலாவது
பிறந்த நாளை இன்று
(06.06.2008) வெள்ளிக்கிழமை
தனது இல்லத்தில் மிகசு
சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.
இவர் திருநெல்வேலி தலங்காவல்
பிள்ளையார், பத்திரகாளி அம்மன்
அருள் பெற்று பல்லாண்டு காலம்
சீரும் சிறப்புடனும் வாழ
வேண்டும் என அப்பம்மா,
அம்மப்பா, அம்மம்மா,
சித்தப்பாமார், சித்திமார்,
மாமாமார், அத்தைமார்,
அண்ணாமார், அக்காமார்,
மசச்சான்மார் மற்றும் உற்றார்,
உறவினர், நண்பர்கள்
வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
திரு.சு.இராசரத்தினம்
(அம்மப்பா),
திருநெல்வேலி. (75040)



**வருண்**
**06.06.2008**

# கண்ணீர் பூக்களை சொரிகின்றோம்

இலந்தை வன சித்திவிநாயகர்
தேவஸ்தான அறங்காவலர்
அமரர்
## கா.த.வேலாயுதபிள்ளை



அவர்களுக்கு எமது கண்ணீர்
பூக்களைக் காணிக்கையாக
சொரிகின்றோம்.

துணிச்சல் மிக்க அற்புத மனிதராக உலா வந்த மனித தெய்வத்தை இழந்து ஆழ்ந்த கவலையில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இலந்தை வன சித்திவிநாயகர் தாள் சேர பிரார்த்திக்கின்றோம்.

வேலணை வங்களாவடி
முருகன் ஆலயம், வேலணை.
**பரிபாலன சபையினர்.** (75133)

# சமய சந்நிதிகளில்

வடமராட்சி,ஜூன்6

புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (202-236)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 6

வட்டு கிழக்கு, துறட்டிப்பனை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்6

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயப் பெருந்திருவிழாநாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (202)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்6

யாழ்ப்பாணம், ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலய அலங்காரத் திருவிழா நாளை சனிக்கிழமை காலை 108 சங்காபிஷேகத்துடன்ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

மாலை சுவாமி வீதி உலா வருதல் இடம்பெறும். (202)

* * *

குருநகர்,ஜூன்6

ஊர்காவற்றுறை கிழக்கு முதலாம் வட்டாரம் ஸ்ரீஆதி வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை 108 சங்காபிஷேகத்துடன்நிறைவடையவுள்ளது. இந்த ஆலய உற்சவத்தின் ஆரம்ப பூசை கடந்த மே மாதம் 29ஆம் திகதி ஆரம்பமானது. (202-236)

# சுனாமி வாழ்வாதார செயற்றிட்டம்
கரித்தாஸ்- கியூடெக்
யாழ்ப்பாணம்

**கணனி போதனாசிரியர்**

பின்வரும் இடங்களில் எம்மால் ஆரம்பிக்கப்படவுள்ள கணனி பயிற்சி நிலையங்களுக்கு கணனி போதனாசிரியர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

01. வல்வெட்டித்துறை -2 வெற்றிடங்கள்
02. மாதகல் -2 வெற்றிடங்கள்
03. இளவாலை -2 வெற்றிடங்கள்

**தகமைகள்:**

- கணனித்துறை சார்ந்த கற்பித்தலில் ஆகக்குறைந்தது 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம்
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து கணனிக்கற்கை நெறிகள் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் (ஆண்/பெண்) தமது விண்ணப்பங்களை 09.06.2008 இற்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

குறிப்பு: விண்ணப்ப உறையின் இடதுபக்க மூலையில் "கணனி போதனாசிரியர் தெரிவு" என அடையாளப்படுத்தி அனுப்பி வைக்கவும்.

**இயக்குநர்**, கரித்தாஸ்- கியூடெக்.
P.O.Box.159, யாழ்ப்பாணம். (சி/553128)

# இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாசநாளங்களில் உண்டாகும்சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகியநோய்களைவிரைவில்குணமாக்கும் அதியற்புதசுதேசிய ஔஷதம்.

## சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி/552829)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 03 05 1936



இறைவன் அடியில் 04 06 2003

## திருமதி புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை

திதி: திருதியை (06.06.2008)

**அன்பான அம்மாவே!**
**அரவணைத்த எம் தாயே!**
**ஆண்டு ஐந்து ஆனதுவோ**
**எம் நோய் தீரவில்லை**
**ஓடோடி வந்திடுவீர் அம்மா**
**எம் துயர் தீர்த்திடுவீர்**
**உங்கள் நினைவுகளுடனே வாழ்கின்றோம்**
**சாந்தி கொள்க எம் தாயே!**

"புவனவாசா",
[illegible] தெற்கு, சாவகச்சேரி.

உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்:
**கணவர், பிள்ளைகள்.** (75035)

# நீங்கா நினைவுகள்
## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 05 1945



உதிர்வு 19 05 2007

அமரர்
## பொன்னுத்துரை புண்ணியகாந்தன்

(பிரபல புகையிலை வர்த்தகர்)

திதி: 06.06.2008

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'

8ஆம் வட்டாரம்,
மண்டைதீவு,
த.மு.: சுதுமலை வடக்கு.

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**
தொ.பே.: 060 2219591. (75119)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறங்குதுறைகளிலிருந்து பொருட்களை ஏற்றுவதற்கென பாரவூர்திகளின் கூலி ஜூன் 1 முதல் அதிகரிக்கப்பட்டது

## யாழ்.அரச அதிபர் விளக்கம்



யாழ்ப்பாணம்,ஜூன்6

01.06.2008 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பாரவூர்திகளின் இறங்குதுறைகளிலிருந்து பொருள்களை ஏற்றுவதற்கு 10 கிலோமீற்றருக்கு நிலையான கட்டணமாக 5 ஆயிரம் ரூபாவிலிருந்து 6ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலதிக தூரத்திற்கு எரிபொருள் செலவுக்கென கிலோமீற்றருக்கு 17 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது என யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

கடந்த 02.06.2008ஆம் திகதி 'உதயனில்' வெளியான 'பாராமுகமாக இருந்து வரும் பாரவூர்திச் சங்கம்' என்னும் தலைப்பிலான வாசகர் திருமுகத்திற்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மேற்படி விடயம் ஏற்கனவே மாவட்டச் செயலகத்தால் கவனத்தில் எடுக்கப்பட்டு 01.06.2008ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தும் வகையில் பாரவூர்திகளுக்கான கொடுப்பனவு நிலையான கொடுப்பனவான ரூபா 5000.00 இல் இருந்து ரூபா 6500.00ஆக அதிகரித்து வழங்கப்படுகின்றது.

அத்துடன் மேலதிகமாக ஓடும் ஒவ்வொரு. கிலோமீற்றர் தூரத்திற்கும் ரூபா 33.00ஆக காணப்பட்ட தொகை தற்போது ரூபா 50.00ஆகவும் தாமதக் கட்டணம் ரூபா 300.00இல் இருந்து ரூபா 500.00ஆக அதிகரித்து வழங்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பான மேலதிக விவரங்களை யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்துடன் நேரடியாக தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். மேலும் இது விடயத்தில் தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் விழிப்புடன் செயற்பட்டது என்பதனையும் குறிப்பிடவேண்டும் - என்றார்.

### சங்கத்தின் விளக்கம்

இது தொடர்பாக யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் விளக்கம் தருகையில்:

மேற்படி விடயம் சம்பந்தமாக எமது சங்கம் பலமுறை அரச அதிபரின் கவனத்திற்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்தது. அதன் பயனாக கடந்த மாதம் 26.05.2008 அன்று அரச அதிபர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து கூலி அதிகரிப்பு தொடர்பாக ஆராய்ந்து கூலியை அதிகரிப்பு செய்வதற்கு மாவட்ட விலை நிர்ணய குழுவின் சிபார்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அரச அதிபரினால் அங்கீகரிக்கப்பட்டு 01.06.2008ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரக்கூடியவாறு கூலி அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாரவூர்திச் சங்கம் அங்கத்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் பாராமுகமாகவே இருக்கின்றது என்ற கருத்து மேற்படி உரிமையாளரினால் தெரியப்படுத்தப்பட்டது முற்றிலும் தவறானதும் எமக்கு கவலையளிப்பதாகவும் உள்ளது என்பதனை தெரியப்படுத்துவதோடு சங்கத்தின் நிர்வாகம் அங்கத்தவர்களின் நலனுக்காக முழு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்பதனையும் இனிவரும் காலங்களிலும் செயற்படுவோம் என்பதனையும் தெரியப்படுத்துகின்றோம் - என்றது. (202)





*திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிர்ச்சி நிலையத்தில் நஞ்சற்ற விவசாய உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான மாதிரி விற்பனை நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.*

*மாதிரி விற்பனை நிலையத்தை ஐ.நா. அபிவிருத்தித் திட்ட இலங்கை வதிவிடப் பிரதிநிதி டக்ளஸ் கீ திறந்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம்.*

*விற்பனையில் உள்ள பொருள்கள் குறித்து யாழ்.மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் விருந்தினர்களுக்கு விளக்கமளிப்பதை இரண்டாவது படத்தில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)*

# வடமராட்சி மக்களின் பிரச்சினைகள் குறித்து சமூக சேவைகள் அமைச்சர் கேட்டறிந்தார்

யாழ்ப்பாணம்,ஜூன்6

வடமராட்சியைச் சேர்ந்த பல்வேறு அமைப்புகள் பல்வேறு விடயங்கள் தொடர்பாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கடந்த திங்கட்கிழமை அவரது அமைச்சில் சந்தித்து கலந்துரையாடியுள்ளன.

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மணற்காடு சென்.அன்ரனீஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், வடமராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கம், கட்டைவேலி- நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மணற்காடு மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கம், அமெரிக்கன் சிலோன் மிஷன் தேவாஸ்தானம் போன்றவற்றின் பிரதிநிதிகள் குழுவொன்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவரது யாழ்.அலுவலகத்தில் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து தங்களது கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

அதன்போது வடமராட்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர், காலவிரயம், பொருள் விரயம், பணவிரயம் மற்றும் பல்வேறு தடைகள் என்பவற்றை நீக்கும்முகமாக மந்திகை அரச களஞ்சியத்தின் மூலம் வடமராட்சி சங்கங்களுக்குரிய பொருள்களை வழங்க ஏற்பாடு செய்து தரும்படி கேட்டுக்கொண்டனர். இவ்விடயம் தொடர்பாக பாதுகாப்புத் தரப்பினருடனும் அரச அதிபருடனும் கலந்துரையாடி, மந்திகை அரச களஞ்சிய சாலையை புனரமைத்து அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறிய அமைச்சர் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான சேவைக் கட்டணத்தை அதிகரித்தல், 1200 ரூபாவிற்கு விற்பனை செய்யக்கூடியதாக சீமெந்தினைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குதல், அத்தியாவசிய பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்களையும் குறைந்த கப்பல் கட்டணச் செலவில் தருவிப்பதற்கான ஏற்பாடு மற்றும் இலகு வட்டிக்கடன் போன்ற விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோது -

தனியார்துறையுடன் போட்டி போடுமளவிற்கு கூட்டுறவுச் சங்கங்களைப் பலப்படுத்தவேண்டுமென்பதே தனது நோக்கமாகும் என்றும் இவ்வாறானதொரு நிலைமையின் கீழ் நுகர்வோருக்குக் குறைந்த விலையில் தரமான பொருள்கள் கிடைக்க வழி செய்யமுடியும் என்றும் தெரிவித்தார்.

கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பினை ஒழுங்குசெய்து தருமாறு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் முன்வைத்த கோரிக்கைக்கு அது தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடுவதாகக் கூறிய அமைச்சர்-

சிற்றூர்திகளுக்கான உதிரிப்பாகங்களை அச்சங்கத்தினால் கொழும்பிலிருந்து கொண்டுவர ஏற்பாடு செய்து தருவதாகவும் பாதை மறிப்பு, சோதனைச்சாவடிகள் போன்ற விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போது இவ்வாறான விடயங்கள் தற்காலிகமான சிரமங்களை ஏற்படுத்தினாலும் பாரிய அழிவுகளைத் தவிர்த்து வருவதாகச் சுட்டிக்காட்டினார். எனவே இவ்வாறான தற்காலிக சிரமங்களை சற்றுப் பொறுத்துக் கொள்ளும்படியும் இன்னும் சில காலத்திற்குள் நிலைமை சுமுகமாகிவிடும் என்றும் தெரிவித்தார்.

அமெரிக்கன் சிலோன் மிஷன் தேவஸ்தானத்தினால் முன்வைக்கப்பட்ட இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் சுயதொழில் முயற்சிகள் தொடர்பில் திட்ட மதிப்பீடுகளை முன்வைக்கும்படியும் மணற்காடு இடைத்தங்கல் முகாமில் வசிப்பவர்களது பிரச்சினைகள் தொடர்பில் விரைவில் உரிய அனைத்துத் தரப்பினரையும் அழைத்துக் கலந்துரையாடி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அமைச்சர் கூறினார்.

# செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்6

ஜி.சீ. உயர்தரத்தில் இரசாயனவியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடத்தும் செயலர்வு நாளை சனிக்கிழமை நிலையத்தில் நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்6

தீவக வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான தமிழ்மொழிப் பாடச் செயலர்வுகள் நாளை சனிக்கிழமை கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (202 -267)

* * *

தீவக வலயப் பாடசாலைகளின் தரம் 6 தொடக்கம் 11 வரை விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (202-267)

* * *

வேலணை,ஜூன்6

தீவக வலயப் பாடசாலைகளின் விசேட கல்விச் செயற்றிட்ட பொறுப்பாசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இச்செயலமர்வுகள் 8.30 மணிக்கு ஆரம்பமாகும். இதற்கு அழைக்கப்பட்ட ஆசிரியர்கள் தவறாது கலந்துகொள்ளவேண்டும் என தீவக வலய கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (203-207)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்கள் அகப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஜூன்6

வரணி, சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய உற்சவ காலத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் எடுத்த நான்கு ஐஸ்கிறீம் கடைகள் சாவகச்சேரி மின்சார சபை உத்தியோகத்தர்களால் கண்டுபிடிக்கப்பட்டன.

அத்துடன் மிருசுவில் வடக்குப் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற மூன்று வீடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஐஸ்கிறீம் கடை உரிமையாளர்கள், வீட்டு உரிமையாளர்கள் ஆகியோர் மீது விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (202-207)




# காக்கைதீவு இந்து மயானத்திற்குப் புனரமைப்புச் சபை அங்குரார்ப்பணம்

நவாலி,ஜூன்6

காக்கைதீவு இந்து மயானத்தைப் புனரமைப்பதற்குப் புனரமைப்புச் சபையொன்று மானிப்பாய் கிராம உப அலுவலகத்தினால் அமைக்கப் பட்டுள்ளது.

இதற்குத் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட 7 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாகக் கடந்த 22ஆம் திகதி உப அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இம்மயானத்தில் தகனஞ்செய்வதற்குப் பணம் அறவிடப்பட வேண்டுமென்றும் இதில் ஒரு பகுதியைப் பிரதேச சபைக்கும் மிகுதிப் பணத்தை மயான புனரமைப்பு, அதன் அபிவிருத்தி என்பவற்றிற்கும் பயன்படுத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் மயானத்தைப் பராமரிப்பதற்கு ஒருவர் தெரிவுசெய்யப்பட்டு அவருக்குக் கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-100)

## ஆங்கில தினப் போட்டி

வேலணை,ஜூன்6

தீவக வலயப் பாடசாலைகளுக்கு இடையேயான வலய மட்ட ஆங்கில தினப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கோட்ட மட்டத்தில் முதல் இரு இடங்களையும் பெற்ற மாணவர்களையும் போட்டியில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-267)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் மருந்துச் சிகிச்சைப் பிரிவு

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் மருந்துச் சிசிச்சைப் பிரிவு (Cancer Chemotherapy Unit) எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினர்களாக வைத்திய கலாநிதிகள் கணேசமூர்த்தி தம்பதியினர் கலந்துகொள்வர்.

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் கதிர்வீச்சு சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு மூன்றாவது ஆண்டு நிறைவில் இப்பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

12 கூறுகளைக் கொண்ட தனி அலகாக இது உருவாக்கப்பட்டுள்ளது. (202-149)

# சேவைக்காலத்தை உறுதிப்படுத்த அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன்6

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யின்கீழ் சுகாதாரத் தொண்டராகக் கடமையாற்றி சுத்திகரிப்புத் தொழிலாளி பதவிக்கு விண்ணப்பித்தவர்களை தமது சேவைக் காலத்தை உறுதிப்படுத்தமாறு கேட்கப் பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் 2005ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் 5 அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்கள் சேவையாற்றியிருந்தால் அக்காலத்தை தாங்கள் பணியாற்றிய பகுதியின் சுகாதார வைத்திய அதிகாரியின் மூலம் உறுதிப்படுத்திய கடிதத்தை நேர்முகத் தேர்வுக்கு இருவார காலத்திற்குள் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி - 'இசற்' புள்ளி விவரம்

கடந்த வருடம் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான 'இசற்' வெட்டுப் புள்ளி மாவட்ட ரீதியாக விவரம் வருமாறு:-

| | யாழ்ப்பாண மாவட்டம் | கிளிநொச்சி மாவட்டம் | முல்லைத்தீவு மாவட்டம் | மன்னார் மாவட்டம் | வவுனியா மாவட்டம் | திருகோணமலை மாவட்டம் | மட்டக்களப்பு மாவட்டம் | அம்பாறை மாவட்டம் | கொழும்பு மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| MEDICINE | 1.8814 | 0.8233 | 0.8039 | 1.2664 | 1.7283 | 1.6175 | 1.6335 | 1.8098 | 1.9910 |
| DENTAL SURGERY | 1.8677 | 0.6352 | 0.7046 | 1.1753 | 1.7282 | 1.5966 | 1.6262 | 1.7893 | 1.9239 |
| VETERINARY SCIENCE | 1.7913 | 0.4220 | 0.6957 | 1.0204 | 1.5222 | 1.5235 | 1.5633 | 1.7238 | 1.8001 |
| AGRICULTURE | 1.0484 | 0.3124 | 0.4799 | 0.5765 | 0.7911 | 0.6956 | 0.9623 | 1.0441 | 1.0350 |
| FOOD & NUTRITION | 1.5594 | 0.3057 | 0.3867 | 0.8858 | 1.3430 | 1.4616 | 1.5078 | 1.4544 | 1.4284 |
| BIOLOGICAL SCIENCE | 0.9712 | NQC | 0.0978 | 0.3385 | 0.5000 | 0.5193 | 0.8066 | 0.9507 | 1.4132 |
| APPLIED SCIENCES (BIO.SC) | 0.9348 | NQC | 0.2081 | 0.8341 | 0.7673 | 0.5465 | 0.7720 | 0.9414 | 1.1970 |
| ENGINEERING (MPR) | 1.8468 | 0.6540 | 0.0974 | 0.9908 | 1.7752 | 1.2444 | 1.2267 | 1.3486 | 1.9334 |
| ENGINEERING (EM) | 1.7871 | 0.5261 | NQC | 0.8240 | 1.6830 | 1.0236 | 1.1974 | 1.1668 | 1.8735 |
| ENGINEERING (TM) | 1.7607 | 0.6510 | NQC | 0.7884 | 1.6355 | 1.1101 | 1.1671 | 1.2621 | 1.9155 |
| QUANTITY SURVEYING | 1.7753 | 0.2036 | NQC | 0.7850 | 1.7601 | 1.0921 | 1.0832 | 1.1760 | 1.7633 |
| COMPUTER SCIENCE | 1.7094 | NQC | NQC | 0.6626 | 1.6019 | 0.9074 | 1.0058 | 1.1099 | 1.7066 |
| PHYSICAL SCIENCE | 1.0473 | NQC | NQC | 0.0218 | 0.3858 | 0.0198 | 0.3229 | 0.4839 | 1.1521 |
| SURVEYING SCIENCE | 1.5728 | NQC | NQC | 0.2785 | 1.4503 | 0.8359 | 0.9971 | 1.1490 | 1.5457 |
| APPLIED SCIENCES (PHY.SC) | 0.9940 | NQC | NQC | 0.4331 | 0.7612 | 0.1242 | 0.6837 | 0.8627 | 0.9705 |
| MANAGEMENT | 1.2621 | 0.5076 | 0.4868 | 0.9198 | 0.9907 | 1.0216 | 0.9283 | 1.1862 | 1.6929 |
| ESTATE MGT.& VALUATION | 1.5533 | 0.9236 | 0.9903 | 0.7911 | 1.7018 | 1.5594 | 1.7087 | 1.5464 | 1.6859 |
| COMMERCE | 1.2308 | 0.2696 | 0.4296 | 0.7713 | 1.1740 | 0.9628 | 0.8694 | 1.1162 | 1.6047 |
| ARTS* | 1.2890 | 0.8010 | 0.8513 | 1.2774 | 1.2890 | 1.2890 | 1.2890 | 1.2890 | 1.2091 |
| ARTS (SP) / MASS MEDIA* | 1.2456 | 1.2456 | 1.2456 | 1.2456 | 1.2456 | 1.2456 | 1.2456 | 1.2456 | 1.2456 |
| ARTS(SAB) - A* | 1.2832 | 1.2832 | 1.2832 | 1.2832 | 1.2832 | 1.2832 | 1.2832 | 1.2832 | 1.2832 |
| MANAGEMENT STUDIES (TV) - A | 1.2537 | 0.5740 | 0.8469 | 0.7225 | 1.4120 | 1.0539 | 0.9095 | 1.1132 | 1.4974 |
| ARCHITECTURE | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.9483 |
| DESIGN | 1.1552 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.8704 |
| LAW | 1.6960 | 0.2917 | 0.9041 | 1.7575 | 1.9715 | 1.6092 | 1.6888 | 1.7503 | 1.8844 |
| INFORMATION TECHNOLOGY | 1.7485 | NQC | NQC | NQC | 1.2417 | 1.2802 | 1.5515 | 1.5704 | 1.7184 |
| MANAGEMENT & INFORMATION TECHNOLOGY | 1.4473 | NQC | NQC | NQC | 1.1638 | NQC | 1.4867 | 1.5501 | 1.6709 |
| PUBLIC MANAGEMENT (SPECIAL) | 1.7721 | 1.1011 | 1.2697 | 1.7462 | 1.8295 | 1.7015 | 1.7761 | 1.5848 | 1.6857 |
| COMMUNICATION STUDIES* | 1.2583 | 1.2583 | 1.2583 | 1.2583 | 1.2583 | 1.2583 | 1.2583 | 1.2583 | 1.2583 |
| TOWN & COUNTRY PLANNING | 1.7034 | 1.4349 | 0.6404 | 0.4564 | 1.6578 | 1.4506 | 1.5485 | 1.6267 | 1.6827 |
| PEACE & CONFLICT RESOLUTION* | 1.6694 | 1.6694 | 1.6694 | 1.6694 | 1.6694 | 1.6694 | 1.6694 | 1.6694 | 1.6694 |
| AYURVEDIC MEDICINE & SURGERY* | 1.0325 | 1.0325 | 1.0325 | 1.0325 | 1.0325 | 1.0325 | 1.0325 | 1.0325 | 1.0325 |
| UNANI MEDICINE & SURGERY* | 0.8578 | 0.8578 | 0.8578 | 0.8578 | 0.8578 | 0.8578 | 0.8578 | 0.8578 | 0.8578 |
| FASHION DESIGN & PRODUCT DEVELOPMENT | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.3771 |
| FOOD SCIENCE & TECHNOLOGY | 1.7564 | 0.2821 | 0.5280 | 0.9336 | 1.4402 | 1.3335 | 1.5659 | 1.5131 | 1.7771 |
| SIDDHA MEDICINE* | 0.5934 | 0.5934 | 0.5934 | 0.5934 | 0.5934 | 0.5934 | 0.5934 | 0.5934 | 0.5934 |
| NURSING | 1.3013 | 0.4216 | NQC | 0.6418 | 0.8734 | 1.1318 | 1.2825 | 1.3807 | 1.3356 |
| INFORMATION & COMMUNICATION TECHNOLOGY | 1.4472 | NQC | NQC | 0.6606 | 1.2278 | 1.3802 | 0.9859 | 1.2665 | 1.6293 |
| AGRICULTURAL TECHNOLOGY & MANAGEMENT | 1.6152 | 0.3239 | 0.4170 | 0.9055 | 1.4800 | 1.3822 | 1.4991 | 1.4433 | 1.5033 |
| MANAGEMENT STUDIES (TV) - B | 1.2881 | 0.8484 | 1.2431 | 1.2650 | 1.3924 | 1.3691 | 1.4134 | 1.2593 | 1.4461 |
| ARTS (SP) / PERFORMING ARTS* | 1.0616 | 1.0616 | 1.0616 | 1.0616 | 1.0616 | 1.0616 | 1.0616 | 1.0616 | 1.0616 |
| ARTS(SAB) - B* | 1.5022 | 1.5022 | 1.5022 | 1.5022 | 1.5022 | 1.5022 | 1.5022 | 1.5022 | 1.5022 |
| MUSIC (SWAMI VIPULANANDA) | 0.2889 | NQC | NQC | 0.1591 | 0.0037 | 0.1606 | 0.7947 | 0.0328 | NQC |
| DANCE (SWAMI VIPULANANDA) | 0.0914 | NQC | 0.2082 | 0.5780 | 0.3987 | 0.0924 | 0.0937 | 0.1751 | NQC |
| INFORMATION & COMMUNICATION TEC (RAJARATA) | NQC | NQC | NQC | NQC | 0.5284 | NQC | 0.7608 | 0.7642 | 0.0494 |
| INFORMATION & COMMUNICATION TEC (VAVUNIYA) | 0.5539 | NQC | NQC | 0.2689 | 0.7637 | 0.5465 | 0.4838 | 1.1690 | NQC |
| HEALTH PROMOTION | 1.2376 | NQC | 0.3174 | 0.4746 | 0.7282 | 1.1992 | 1.0972 | 1.2599 | 1.2271 |
| PHARMACY | 1.6565 | NQC | NQC | 0.7022 | 1.1779 | 1.2624 | 1.4544 | 1.6196 | 1.6446 |
| MEDICAL LABORATORY SCIENCES | 1.6284 | 0.2611 | 0.0265 | 0.7536 | 0.8932 | 1.2708 | 1.5194 | 1.6220 | 1.7265 |
| RADIOGRAPHY | 1.6631 | 0.1796 | 0.0432 | 0.8643 | 0.9787 | 1.2828 | 1.3546 | 1.5862 | 1.6656 |
| PHYSIOTHERAPY | 1.7498 | NQC | 0.2285 | 0.9628 | 1.4360 | 1.3087 | 1.5170 | 1.7634 | 1.7217 |
| ENVIRONMENTAL CONSERVATION & MANAGEMENT | 0.9696 | NQC | NQC | 0.7258 | 0.2474 | 0.7253 | 0.6860 | 0.9301 | 1.2389 |
| FACILITIES MANAGEMENT | 1.5724 | 0.3833 | 0.1399 | 0.9270 | 1.6598 | 1.5755 | 1.2867 | 1.5759 | 1.6379 |
| TRANSPORT & LOGISTICS MANAGEMENT | 1.7512 | NQC | NQC | 0.6122 | 1.5306 | 0.9671 | 1.0414 | 1.1548 | 1.7395 |
| MOLECULAR BIOLOGY AND BIOCHEMISTRY | 1.8466 | 0.0197 | 0.6205 | 0.9759 | 1.6591 | 1.4409 | 1.5723 | 1.7679 | 1.9005 |
| INDUSTRIAL STATISTICS & MATHEMATICAL FINANCE | 1.6321 | NQC | NQC | 0.5258 | 1.3310 | 0.9076 | 1.0118 | 1.0479 | 1.6442 |
| STATISTICS & OPERATIONS RESEARCH | 1.5632 | NQC | NQC | 0.2304 | 1.3010 | 0.7673 | 1.1134 | 1.0207 | 1.5635 |
| COMPUTATION & MANAGEMENT | 1.5282 | 0.9829 | 1.5017 | 1.0971 | 1.6048 | 1.5764 | 1.6164 | 1.5431 | 1.6141 |
| FISHERIES & MARINE SCIENCES | 1.2689 | NQC | 0.4122 | 0.3817 | 0.9768 | 0.7240 | 0.9525 | 1.2924 | 1.2686 |
| ISLAMIC STUDIES* | 1.2114 | 1.2114 | 1.2114 | 1.2114 | 1.2114 | 1.2114 | 1.2114 | 1.2114 | 1.2114 |
| SCIENCE & TECHNOLOGY | 1.0295 | NQC | NQC | 0.1127 | 0.9783 | 0.2401 | 0.7741 | 0.7522 | 0.9529 |
| COMPUTER SCIENCE & TECHNOLOGY | 1.3423 | NQC | NQC | 0.5511 | 1.1609 | 0.5471 | 0.9194 | 1.3204 | 1.2482 |
| ENTREPRENEURSHIP & MANAGEMENT | 1.1962 | NQC | NQC | 0.6562 | 0.9991 | 1.1465 | 1.0480 | 1.3609 | 1.4867 |
| ANIMAL SCIENCE | 0.9158 | NQC | NQC | 0.8437 | 0.7744 | 0.1266 | 0.6123 | 0.5794 | 0.7689 |
| MUSIC (RAMANATHAN ACADEMY) | 0.3247 | NQC | 0.1374 | NQC | 0.6684 | 0.1289 | NQC | NQC | NQC |
| DANCE (RAMANATHAN ACADEMY) | 0.2616 | NQC | 0.4720 | 0.0136 | 0.2071 | 0.3302 | NQC | NQC | 0.3072 |
| ART & DESIGN | 0.2521 | NQC | NQC | NQC | 0.4411 | NQC | NQC | NQC | NQC |
| DRAMA & THEATRE | 0.9397 | NQC | NQC | 1.0169 | 0.4058 | NQC | 0.9125 | 0.8083 | NQC |
| VISUAL ARTS | 0.0915 | 0.7154 | NQC | 0.8920 | 0.1070 | 0.5133 | 0.1047 | 0.4736 | NQC |
| EXPORT AGRICULTURE | 0.8530 | NQC | NQC | 0.0919 | 0.3003 | NQC | 0.6418 | 0.7763 | 0.8800 |
| TEA TECHNOLOGY & VALUE ADDITION | 0.9819 | NQC | NQC | NQC | 0.4214 | NQC | 0.1870 | 0.7622 | 0.8597 |
| INDUSTRIAL INFORMATION TECHNOLOGY | 1.2804 | NQC | NQC | 1.0325 | 1.1492 | 0.8586 | 1.0113 | 1.2985 | 1.0998 |
| MINERAL RESOURCES & TECHNOLOGY | 1.0892 | NQC | NQC | 0.2120 | 1.0478 | NQC | 0.9461 | 0.9762 | 0.8836 |
| BUSINESS INFORMATION SYSTEMS (SPECIAL) | 1.5505 | NQC | NQC | NQC | 1.5396 | NQC | 0.7299 | 1.3884 | 1.6019 |
| OPERATIONS & TECHNOLOGY MANAGEMET (SPECIAL) | 1.3514 | NQC | NQC | NQC | 1.5775 | 1.0036 | 0.6531 | 1.4032 | 1.5878 |
| INFORMATION TECHNOLOGY FOR MANAGEMENT STUDIES | 0.7107 | NQC | NQC | 0.3952 | 1.0145 | 0.9144 | 1.1627 | 1.1662 | NQC |
| COMPUTING & INFORMATION SYSTEMS | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.7165 | 0.3824 |
| PHYSICAL EDUCATION | NQC | NQC | NQC | NQC | 0.1803 | NQC | NQC | 0.5161 | 0.5989 |
| SPORTS SCIENCES & MANAGEMENT | NQC | NQC | NQC | 0.4641 | NQC | NQC | 0.5723 | 0.1857 | 0.6554 |
| SPEECH & LANGUAGE THERAPY | NQC | NQC | NQC | NQC | NQC | 1.7369 | NQC | 1.0284 | 1.2258 |
| ARABIC LANGUAGE* | 0.8589 | 0.8589 | 0.8589 | 0.8589 | 0.8589 | 0.8589 | 0.8589 | 0.8589 | 0.8589 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## யுத்தம் என்ற மூலதனத்தில் தென்னிலங்கை அரசியல்

இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மை மக்களின் கருத்து நிலைப்பாட்டை அப்படியே வெளிப்படுத்தியிருக்கின்றார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம்.

கடந்த ஐந்து, ஆறு தசாப்தங்களாக இலங்கைத் தீவை ஆட்டிப்படைத்து வரும் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுக்கும் - இதய சுத்தியுடன் கூடிய - எண்ணப் போக்கு இந்த அரசுக்கு இல்லவே இல்லை என்பதை வெளிப்படையாகவே சுட்டிக்காட்டியிருக்கின்றார் அவர்.

யுத்தம் என்ற மூலதனத்தை மட்டும் வைத்து அரசியல் நடத்தலாம் எனக் கருதும் மஹிந்தரின் அரசு, நாட்டின் எல்லாப் பிரச்சினைகளையும், யுத்தத்தையும், அதில் முனைப்புடன் ஈடுபடும் அரசின் தீவிரப் போக்கையும் காட்டி வெற்றிகரமாகச் சமாளித்து விடலாம் என்றும் கணக்கிட்டுள்ளது போலும்.

நாட்டில் பெரும்பான்மை என்ற சாதக நிலையையும் -

ஆயுதப் படைகளைக் கொண்ட அரச அதிகாரம் என்ற வலிமையையும் -

கையில் வைத்துக்கொண்டு சிறுபான்மை இனங்களைப் போர் முனையில் அடக்கி, தான் விரும்பியவற்றை எல்லாம் அந்தச் சிறுபான்மை இனங்களின் மீது வெற்றிகரமாகத் திணிக்கவும், செலுத்தவும் முடியும் என்றும் -

போர்முனைப்பைக் காட்டி, அதற்காகத் தியாகங்களைச் செய்யத் தென்னிலங்கை தயங்கக்கூடாது என்ற கோஷத்தை முன்னிறுத்தி, தனக்கேற்றவாறு தென்னிலங்கையை மடக்கிக் கொண்டு போகலாம் என்றும் -

பேரினவாதப் போக்கில் செயற்படும் ஆளும் தரப்புக் கருதுகின்றது போலும். இதையே சற்று விளக்கமாக விவரிக்கின்றார் ஹக்கீம்.

யுத்தம் மூலம் மாத்திரமே தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் எனக் கூறும் இந்த அரசு, சிறுபான்மை இன மக்களையும் ஜனநாயகத்தையும் கூட அந்த வழியில்தான் கையாள முனைகின்றது என்றும் குற்றம் சுமத்துகின்றார் ஹக்கீம்.

வடக்கிலும், கிழக்கிலும் யுத்தத்தைக் கையாளும் அதே பாணியில்தான் கிழக்கில் மாகாணசபைத் தேர்தலையும் அரசு கையாண்டது என்பது வெள்ளிடைமலை. அதையும் ஹக்கீம் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

அதுமட்டுமல்ல. வடக்கு, கிழக்கில் இன்று பூதாகரமாக உருவெடுத்திருக்கும் இனப்பிரச்சினையை யுத்தவெறி மூலம் அடக்கி, ஒடுக்கி, நசுக்கி விடலாம் என்று கணக்கிடும் கொழும்பு அரசுத் தலைமை, தென்னிலங்கையில் எரியும் பிரச்சினைகளைக்கூட அதே பாணியில் தான் கையாளக் கங்கணம் கட்டி நிற்கின்றது என்பதும் தெளிவு.

ஊடகவியலாளர்களில் இருந்து ஊதிய உயர்வு கோருவோர் வரை அனைத்துத் தரப்பினருமே இன்று யுத்தத்தில் எதிர்த் தரப்பினால் கையாளப்படுகின்ற அதே பாணியில்தான் அரசுத் தரப்பினால் கையாளப்படுகின்றனர்.

அரசின் யுத்த வெறிப் போக்கை விமர்சித்து உண்மையைத் தென்னிலங்கை மக்களுக்கு அம்பலப்படுத்த முனையும் ஊடகவியலாளர்களை - அவர்கள் தவறு ஏதும் இழைத்திருந்தால் அதற்காக அவர்களுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க வக்கில்லாத பாதுகாப்பு அமைச்சு - அத்தகையோரை 'தேச விரோதிகள்' எனப் பட்டம் சூட்டி அச்சுறுத்துகின்றது. இத்தகைய ஊடகவியலாளர்களின் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தான் எடுக்கப் போவதாகவும் அது பகிரங்கமாகவே மிரட்டுகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இடம்பெற்றவை எனக் கருதப்படும் ஊழல்கள், மோசடிகள், குளறுபடிகள் போன்றவற்றை அம்பலப்படுத்திய பிரபல ஆங்கில வாரஇதழ் ஒன்றின் ஊடகவியலாளர் ஒருவர், கடத்தப்பட்டு, கடுமையாகத் தாக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டு, மீண்டும் வாய் திறக்க முடியாதவாறு அதட்டி, உருட்டி மிரட்டப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்.

அந்தப் பின்புலத்திலேயே இவ்வாறு பாதுகாப்புத் தரப்பை விமர்சிக்கும் ஊடகவியலாளர்களின் வாயை அடக்க 'உரிய முறையில்' நடவடிக்கைஎடுக்கப்படும்என்ற 'அச்சுறுத்தல்' அல்லது 'கண்டிப்பான அறிவுறுத் தல்' பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

யுத்தத்தை மட்டும் நம்பி அரசியல் நடத்தும் கொழும்பு அரசுத் தலைமை, அந்த யுத்தத்தை அரசு நடத்தும் விதம் குறித்து தென்னிலங்கைத் தரப்புகளைக் கூட விமர்சிக்க விடுவதில்லை என்று கங்கணம் கட்டி நிற்பதையே பாதுகாப்பு அமைச்சின் மேற்படி காட்டமான - பகிரங்கமான - அறிவித்தல் எடுத்துக் காட்டுகின்றது.

ஒரு நாட்டில் எதேச்சாதிகாரமும், சர்வாதிகாரமும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும்போது, தமது செயற்பாடுகளை நியாயப்படுத்த என்னென்ன வாதங்களை எல்லாம் முன்வைக்குமோ, அந்த வாதங்களை எல்லாம் இப்போது பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளமும் முன்வைக்கின்றது.

இலங்கைத் தீவு இனந்தெரியாத ஒரு திகில் திசையை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதற்குக் கட்டியம் கூறும் அம்சங்களே இவை.

# மட்டக்களப்பில் மனிதாபிமானப் பணி

# பதற்றம் காரணமாக பெரிதும் பாதிப்பு

கொழும்பு,ஜூன்06

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாகக் காணப்படும் பதற்ற நிலைமை காரணமாக அங்கு மனிதாபிமானப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன என ஐக்கிய நாடுகள் அமைப்பைச் சேர்ந்த மனிதாபிமானப் பணியாளர்கள் ஐக்கிய நாடுகள் மனிதாபிமான அலுவலகத்தின் செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளனர்.

வன்முறைகள் குறித்த அச்சம் காரணமாக தமது பணியாளர்களைக் களப் பணிகளுக்குத் தாங்கள் அனுப்புவதில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் இடம்பெயர்ந்து வாழும் 18ஆயிரம் மக்களுக்கும் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள ஒரு லட்சத்து 24ஆயிரம் மக்களுக்கும் மனிதாபிமான அமைப்புகள் உதவிவருகின்றன என ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான ஒருங்கிணைப்பிற்கான அலுவலகத்தின் மட்டக்களப்புக் கிளையின் தலைவர் தாண்டி வபே குறிப்பிட்டுள்ளார்.

### நடமாட்டம் குறைப்பு

மனிதாபிமான அமைப்புகள் நிவாரணப்பணிகளில் ஈடுபட்டுள்ளமையுடன் மீளக்குடியமர்ந்தவர்களின் வாழ்க்கையில் சுமுக நிலையை மேம்படுத்தும் நடவடிக்கைகளையும்மேற்கொண்டுள்ளன எனவும் தெரிவித்துள்ள அவர், கடந்த ஒருவார காலமாகப் பதற்றம் காணப்படுவதால் மனிதாபிமானஅமைப்புகளின் பணியாளர்கள் நடமாட்டத்தைக் குறைத்துள்ளனர் என்றார்.

### இயல்பு நிலையில் குழப்பம்

பொதுமக்களின் வாழ்க்கை முடங்கியுள்ளது. போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. அரச,தனியார் அலுவலகங்கள்மூடப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருதரப்பு மத்தியிலும் பேச்சுகள் இடம்பெறுகின்றனஎனக்குறிப்பிட்டுள்ள அவர்,"பேச்சுத் தொடர வேண்டுமென நாங்கள் விரும்புகின்றோம். இது பதற்றத்தைக் குறைப்பதற்கும் நம்பிக்கையை மீண்டும்ஏற்படுத்துவதற்கும் , மீண்டும் மனிதாபிமான அமைப்புகள்நிவாரண,புனர்நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கவும் உதவும்." என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தன்னால் மே22 ஆம் திகதிக்குப்பின்னர் வெளியேநடமாட முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவித்துள்ளமனிதாபிமானப் பணியாளர் ஒருவர்,வீதிகளில் பயணம் மேற்கொண்டு பின்னர் திரும்பி வர முடியாதநிலையில் சிக்குவதற்கு எவரும் விரும்பவில்லை -என்றும் தெரிவித்துள்ளார்.

### தற்போதைய பதற்றத்தால் செயற்பாடுகள் பாதிப்பு

இதேவேளை, இலங்கையில் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புகளின் வாராந்த அறிக்கையில் மனிதாபிமானப் பணிகள் அங்கு பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பிலிருந்து காத்தான் குடிக்கும், ஏறாவூருக்கும் செல்லும் வீதிகள் பதற்றம் நிறைந்தவையாக உள்ளன.தொடர்ச்சியான ஊரடங்கு காரணமாக அனேக அமைப்புகள் தமது செயற்பாட்டைக் குறைத்துள்ளன. -என அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் ஜூன் 6

நவாலியூர் நா.செல்லத்துரை எழுதிய கலை இலக்கியப் பணிகள் என்னும் நூலின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் புனித யாக்கோபு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை இலங்கைத் திருச்சபையின் யாழ். குருமுதல்வர் அருள்பணி எஸ்.பி.நேசகுமாரும் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் நிகழ்த்துவர். (202)

* * * *

யாழ்ப்பாணம் ஜூன் 6

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் விசேட கல்வித் திட்டத்திலான சிறுவர் மகிழ்காலம் நாளை சனிக்கிழமை கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு பாடசாலைகளில் விசேட கல்வி ஆசிரியருடன் இனங்காணப்பட்ட இரு மாணவர்களும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேம காந்தன் கேட்டுள்ளார். (202 - 207)

* * * *

கோப்பாய் ஜூன் 6

ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.சுவாமி நாதனால் எழுதப்பட்டு நீர்வேலி நற்பணிச் சங்க சுவிஸ் அமைப்பினால் வெளியீடு செய்யப்படும் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை கற்றல் வழிகாட்டி நூல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் அதிபர் சி.குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் முதன்மை விருந்தினராக கலந்துகொள்வார். (202- 72)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 25 | 07.06.2008 |
| | சனிக்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | பி.ப.05.12 வரை |
| நட்சத்திரம் : | பூசம் |
| | பி.இ. 03.01 வரை |
| சதுர்த்தி விரதம் | |
| சுபநேரம் : | 02.52 - 04.22 |
| ராகுகாலம் : | 08.52 - 10.22 |

## முதுகலைமாணிக் கற்கைநெறி; பரீட்சைக்கு விண்ணப்பிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம் ஜூன் 6

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தினால் நடத்தப்பட்டுவரும் தமிழ் மற்றும் சைவசித்தாந்த முதுகலைமாணிக் கற்கை நெறியின் 2007-2008 கல்வியாண்டின் முதலாம் அரையாண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சைகள் அடுத்த மாத முதல் வாரத்தில் நடைபெறும் எனவும் விண்ணப்பங்களை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் பீடாதிபதி அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பீடாதிபதி கே.கந்தசாமி கேட்டுள்ளார்.

இதேவேளை வவுனியா வளாகத்தில் நடாத்தப்பட்டு வரும் பட்டபின் கல்வி டிப்ளோமாக் கற்கைநெறியின் 2005-2007 கல்வியாண்டின் இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுக்கான பரீட்சைகள் இம்மாத இறுதியில் நடத்தப்படவுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் வவுனியா வளாக வியாபாரக் கற்கைகள் பீடத்தில் விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் அப்பீடத்திலேயே ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சைக்குரிய மீள் பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களை உயர்பட்டப்படிப்புகள் பீடத்திலும் வவுனியா வளாகத்திலும் மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## கேட்பவற்றில் நல்லவற்றை புரிந்துணர்தல்வேண்டும்

செல்வத்துள் செல்வம் செவிச் செல் வம் என்கிறார் திருவள்ளுவர்.

செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையாய செல்வம், செவிச் செல்வம் ஆகும். அப்படியாயின் பொருட் செல்வம் என்று ஒரு கேள்வி எழுகின்றது. காசேதான், கடவுள் அப்பா என்று காசைக் கடவுளாகக் கும்பிடுகின்ற தற்காலத்தில் 'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்' என்றால் அது சீரணம் ஆவது கஷ்டம் தான்.

பிறர் சொல் மற்றையோர் கேட்பது என்பது இன்று காணுதற்கு அரிதாகி வருகின்றது. செவிச் செல்வத்தை மனிதர்கள் புறக்கணித்து வருதலைத் தற்போது எங்கும் துலக்கமாகக் காண முடிகின்றது.

செவிச் செல்வம் மதிப்பிழந்தமைக்குப் பொருட்செல்வத்தின் மதிப்பேற்றமும் காரணமாகலாம். பொருட் செல்வம் புகழ் செல்வம் அகந்தையையும் செருக்கையும் ஏற்படுத்தும் தன்மையது. அதனால் பிறர் சொல்வதைக் கேட்க அவர்கள் தயாராகவில்லை.

கற்றிலனாயினும் கேட்க என்று வள்ளுவர் கூறிவிட்டு அதன்பின் எனைத்தானும் நல்லவை கேட்க என்று சற்று அழுத்திக் கூறுகின்றார்.

கல்வி கற்றல் என்பது தனிமனித அனுபவம் எனில் கேட்டல், பிறர் வாயிலிருந்து பிறர் அனுபவங்களும் பெறப்படுகின்றன. கற்றல் மூலம் பெற்ற தனிமனித அனுபவம் கேட்டல் மூலம் மேலும் விரிவுபெறுகிறது.

கல்வியை முறையாகக் கல்லாதவரும் பிறர் சொல்லைக் கேட்டு அறிவைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

நல்லவர்களின் சொற்களைக் கேட்பவர்கள் தமது அறிவைப் பெற்றுக்கொள்வது மாத்திரமல்ல கற்றல் மூலம் பெற்ற அறிவை செம்மைப் படுத்தியும் கொள்வர். அதனால் கற்றலிலும் கேள்விக்கு முக்கியத்தும் கொடுப்பது தமிழர் மரபாக அமைந்தது.

கேள்வி எனும்போது எப்படிப்பட்ட விடயங்களைக் கேட்கவேண்டும். எத்தகையவர்களிடமிருந்து கேட்க வேண்டும் என்பதையும் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

இன்று பலதும் பத்தும் குப்பையுங் கூளங்களும் காற்றில் மிதந்து வருகின்றன. அத்தகைய கேட்கக் கூடாதனவற்றைக் கேட்பதில் பலருக்கு ஆர்வம் உண்டு. அதனால் கெட்டழிந்து போகிறார்கள். அவை செவிச் செல்வங்கள் அல்ல. கர்ண கொடூரங்கள் அவற்றைக் கேளாமல் விடுவது தான் செல்வம். கேட்போர் கேட்டவற்றைப் பிரிந்துணர்ந்து நல்லவற்றை மாத்திரம் ஏற்கும் திறனையும் வளர்த்துக்கொள்ளுதல் குறிப்பாகத் தற்காலத்தில் அத்தியாவசியமாகும்.

எல்லோருடைய வாய்மொழிகளும் நன்மைபயப்பனவாக இல்லை. அறிவின் கருவூலமாகவும் இல்லை. சில வசைகளாகவும் வம்புகளாகவும் உள்ளன. இன்னுஞ் சில மனிதர்களை வாழ்வில் வழுக்கி விழச்செய்கின்றன. எனவே தான் ஆழ்ந்த அறிவும் உயர்ந்த ஒழுக்கமும் கொண்டு விளங்கும் சான்றோர்கள் பெரியோர்கள் யாவர் எனத் தெளிந்து அவர்களின் சொல் கேட்டு ஒழுகவேண்டும் எனப்படுகின்றது. நம்மில் அன்பும் கருணையும் கொண்டு எமது வாழ்வு முன்னேற்றத்தையே குறிக்கோளாகக்கொண்டுள்ள எமது பெற்றோர்கள் மற்றும் குடும்பத்தில் மூத்தவர்கள் ஆகியோரின் நல்லுரைகளையும் அறிவுரைகளையும் கேட்டு அதன்படி ஒழுகவேண்டும். நம்மை நல்வழிப் படுத்தும் நல்லாசிரியரின் சொற்களுக்கு மதிப்பளித்துக் கட்டுப்பட்டு வாழ வேண்டும்.

### ஞானக்கதிர்

முதிர்ந்த அறிவும் அறநெறிபிறழா வாழ்க்கையும் நன்னடத்தையும் கொண்டவர்களுடன் நட்புக் கொள்வதால் அவர்களிடம் நல்லவற்றைக் கேட்கும் வாய்ப்பு ஏற்படும். மாறாக கூடாதவர்களின் நட்பைப்பெறுவதால் அவர்களின் தீய வார்த்தைகளைக் கேட்டுத் துன்பப் படநேரிடும்.

இன்றைய காலகட்டத்தில் பொய்யுரைகளையும் தீய கருத்துக்களையும் கேளாமல் விடுதலும் எனைத்தானும் நல்லவை கேட்டலும் தான் அறிவுடைய செயல் அதுவே செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் ஆகும்.

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்கடைத் திறப்பு விழா
## 06.00.2008

தென்மராட்சியில் ஓர் புதிய உதயம்

# ஜெகா காலணியகம்

சாவகச்சேரி நவீன சந்தை உட்புறம்

சிறியோர் முதல் பெரியோர் வரை
மங்கையர் முதல் மகளிர் வரை
சகல வயதினர்களுக்கும் ஏற்றவகைகளில்
சகல விதமான காலணித் தெரிவுகளுக்கும்
நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம் ஜெகா காலணியகம்.

உரிமையாளர்
ஜெகா எலக்ரிக்கல். ஜெகா காலணியகம், சாவகச்சேரி.
(75019)

### விவசாயிகளுக்கு உதவி

சமூக செயற்பாட்டு மையம் ஆனைக்கோட்டை விவசாய சம்மேளனத்தினூடாக 30 பேருக்கு வீட்டுத் தோட்டப் பயிர்செய்கைக்கான விதைகளும் 10 பயனாளிகளுக்கு சேதனப் பசளை, விவசாய உபகரணங்களையும் வழங்கியுள்ளது. (202-100)

### வண்ணை கோம்பயன்மணல் இந்துமயான பரிபாலன சபை
## பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம்: 15.06.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி
இடம்: மயான மண்டபம்
தலைவர்: கலாநிதி சு.குணராசா அவர்கள்
நிகழ்ச்சி நிரல்:
1. தேவாரம் 2. அறிக்கைகள் 3. தலைமையுரை
4. புதிய நிர்வாகிகள் தெரிவு 5. பிறவிடயங்கள்

* ஆயுட்கால உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள் வருடாந்த சந்தாப்பணத்தைச் செலுத்தி உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்ளவும்.
* புதிய உறுப்பினர்களாக இணைய விரும்புபவர்கள் கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொண்டு உறுப்புரிமை பெற விண்ணப்பிக்கலாம்.

கலாநிதி க.குணராசா, தலைவர் (75121)
இரா.செல்வவடிவேல், செயலாளர் 142/1, பாண்டியன் வீதி, யாழ்ப்பாணம்.

## Our Deepest Sympathies



**Y.KEETHAN**

You were a great inspiration in grooming
Tafe Cricket Club
You supported and stood by us at all time
Your effort and hard work was seen in
every success of ours.
Why have you left us and gone?
We extend our deepest sympathies and
consolation to your bereaved family..
May your soul rest in peace...

(C/553136) Tafe Cricket Club, Malasia.

## பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன்6

யாழ்ப்பாண பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடத்தின் 2005/2006 கல்வியாண்டின் கல்வியியல் முதுமாணி கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் தங்கள் பரீட்சைப் பெறுபேறுகளை பீடத்தில் பெற்றுக் கொள்ளுமாறு பீடாதிபதி கேட்டுள்ளார்.

இதேவேளை- பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு இதுவரை சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் அவற்றை உயர் பட்டப்படிப்புகள் பீடத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (202)

## திசைமுகப்படுத்தும் வகுப்புகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்பதிவுகள் அலகினால் 2006/ 2007 மற்றும் 2007/ 2008 கல்வி ஆண்டிற்கு முதற்கலைத் தேர்வுக்கு பதிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தும் வகுப்புகள் நாளை சனிக்கிழமை தொடக்கம் இம்மாதம் 13ஆம் திகதி வரையும் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி திசைமுகப்படுத்தும் வகுப்புகளுக்கு குறித்துரைக்கப்பட்ட நாள்களில் சமூகம் தந்து பயன்பெறுமாறு மாணவர்களை வெளிவாரிப்பட்டப்பதிவுகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் கா.குகபாலன் கேட்டுள்ளார். (202)

## கண்ணீர் அஞ்சலி



இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை திடீர் பரிசோதனைக் குழுவின் பொறுப்பதிகாரி க.யோகரத்தினம் அவர்களது மகன் **யோகரத்தினம் கீதன்** 31.05.2008 ஆம் திகதியன்று கொழும்பில் அகாலமரணமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதம பிராந்திய முகாமையாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்.
இ.போ.ச.யாழ்.சாலை,யாழ்ப்பாணம். (75142)

## காணவில்லை



**செல்வராஜா துஸ்யந்தன்**

இவர் 06.06.2007 தொடக்கம் இன்று வரை வீடு திரும்பவில்லை. இவரைக் கண்டவர்கள் எமக்கு அறியத்தரவும். இவரை காணாமல் எமது குடும்பம் மிகுந்த வேதனையில் உள்ளது. என்று ஐயா நாம் உன்முகத்தை காண்போம். எங்கிருந்தாலும் வந்துவிடு எம் துயர் தீர்க்க.

வே.செல்வராஜா, சாவகச்சேரி வடக்கு, மீசாலை.
(75003)

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன்
ச.கைலாஷ் அவர்களின்
அன்புத் தந்தை

**பரமுவிநாயகம் சண்முகநாதன்**

(ஓய்வு பெற்ற பொறியியலாளர்)
02.06.2008 இறைபதம் அடைந்த எமது நண்பனின் தந்தை பரமு விநாயகம் சண்முகநாதன் அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**நண்பர்கள்.** (சி/553118)

## விற்பனைக்கு

பசுமாடு நாம்பன் கன்றுடன் விற்பனைக்கு.
தொடர்பு:- இல, 33.கன்னாபுரம், யாழ்ப்பாணம்.
காலை 8 மணிக்கு முன் தொடர்பு கொள்ளவும். (75120)

## புறொயிலர்தேவை

புறொயிலர் விற்பனைக்குத் தேவை.
வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும்.
**வீனஸ் பாம்,** பலாலி வீதி,
திருநெல்வேலி.
T.P:077-9905269, 077-9184479 (75118)

## மணமகள் தேவை

20.04.1976 பிறந்த இந்து கௌரவ MBBS டாக்டருக்கு நற்குணமுடைய படித்த பெண் அல்லது உத்தியோகம் பார்க்கும்பெண்தேவை மிதுனலக்கினத்தில் செவ்வாய், சனி உண்டு, கிரக பாவம் 21.
தொடர்பு:
"உதயன்" பணிமனை. (75122)

## தவறிவிட்டது

யோகநாதன் மயூரன் என்பவருடைய தே.அ.அ, ஓட்டோ ஆவணங்கள் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும் சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 12, 5 ஆம் ஒழுங்கை
அரசடி வீதி நல்லூர்.
தொ.பே.:0772197510 (75123)

## தவறிவிட்டது

சபாநாயகன் காயத்திரி என்பவரது தே.அ.அ. (898262731V)நாவலர் வீதிக்கும், இராசாவின் தோட்டம் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு:- இல. 5 பழம் வீதி,
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
(75122) T.P: 0212226565

## கோழிகள் தேவை

புறொயிலர், கல்பேட்
கோழிகள் தேவை.

தொடர்பு கொள்க:
**ஆ. ரூபரங்கன்** (ரங்கன்)
மூளாய் வீதி, மூளாய் (786 பஸ் வீதி)
[illegible] (75050)

## 22ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 | 10 |
| 02 | 06 |
| 1925 | 1986 |



**அமரர் தம்பு கதிரவேலு**

(இளைப்பாறிய அதிபர், யா/கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை)
திதி: 06.06.2008

ஆண்டுகள் பல சென்றாலும்
உங்களது நினைவலைகள்
என்றென்றும் எம் மனதை விட்டு அகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும்
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிருவத்தம்பை, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை. (74841)
தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம்
(ஆச்சாரியார்)



சுழிபுரம், பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம் 04.06.2008 இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் முருகானந்தன் (பெரியபவுண்), சிவரஞ்சன் (சின்னப்பவுண்) ஆகியோரின் அன்பு தந்தையும் தாசிகாவின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.06.2008 அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுழி புரம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு: இந்த அறிவித்தலை உடன் அறிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

பத்திரகாளி கோயிலடி, சுழிபுரம். (75124)
தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி கணபதி முத்தம்மா



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் புத்தூர் வடக்கு, மருதடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி முத்தம்மா புதனிரவு காலமானார்.

அன்னார் கணபதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வல்லிபுரம்- செல்லம் தம்பதியரின் அன்பு மகளும் பெரியான்- புதியாள் தம்பதியரின் மூத்த மருமகளும் செல்லம்மா, அழகம்மா, மனோகரா, காலஞ்சென்ற திரவியம் (ராசா), அற்புதராணி, தவலிங்கம் (சுவிஸ்), பவானி, தயாநந்தரோகினி ஆகியோரின் பாசமிகு தாயும் தியாகராஜா, சிவஞானம், கருணாநிதி, இராசதுரை, அன்பழகன், ஜினிதர் (சுவிஸ்), தர்மகுலசிங்கம், நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் கவி, பகீரதன் (லண்டன்), செந்தூர்குமரன் (கோபி- லண்டன்), நிலாநிதன், பரணிதரன், திவ்யா, தரணியா (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (05.06.2008) இல் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மருதடி, புத்தூர் வடக்கு, புத்தூர். (75139)
தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸா மீதான பொருளாதாரத் தடையை புனிதப் போர் மூலம் தகர்த்தெறியுங்கள்!

## அல்-குவைதா இரண்டாம் நிலைத் தலைவர் முஸ்லிம்களுக்கு அறைகூவல்



நியூயோர்க், ஜூன் 06

காஸா மீதான இஸ்ரேலின் பொருளாதாரத் தடைவிதிப்பை, புனிதப் போர் மூலமாகத் தகர்த்தெறிய முன்வருமாறு முஸ்லிம்களுக்கு அல்-குவைதாவின் இரண்டாம் மட்டத் தலைவர் அய்மான் அல்-ஜவாஹிரி ஒலி நாடாவொன்றின் வாயிலாக அறைகூவல் விடுத்தார்.

இஸ்லாமியப் போராளிகளின் இணையமொன்று, நேற்றுமுன்தினம் புதன்கிழமை இந்த ஒலிநாடாவை வெளியிட்டது. அய்மானின் உரை, 11 நிமிடங்கள் வரை நீடித்தது. அவர் தொடர்ந்து பேசுகையில்,

''பலஸ்தீன நாட்டின் மீட்சி, அதன் புதல்வர்கள் ஜிகாத் பாதையில் அணிவகுத்துச் செல்வதிலேயே தங்கியுள்ளது'' - என்றார்.

1967ஆம் ஆண்டு, அரேபியாவுக்கும் இஸ்ரேலிக்குமிடையே நடைபெற்ற யுத்தத்தின் 41 ஆவது வருடத்தையொட்டி, இச் செய்தி விடுக்கப்படுகின்றது என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகை யொன்று அதில் காணப்பட்டது.

அய்மான் அல்-ஜவாஹிரி தொடர்ந்து பேசுகையில், '' முஸ்லிம் நாடு, அதன் புனித பூமி, செல்வங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான சக்தி அரபு அரசுகளிடம் கிடையாது. தேசத்துரோக ஆட்சிகளின் விலங்குகளைத் தகர்த்தெறிய நாட்டுப் புதல்வர்கள் முன்வர வேண்டும். அவர்கள் ஜிகாத்தை மேற்கொள்ள முனைய வேண்டும். இது கடமையும்கூட'' - என்றார்.

அல்-ஜவாஹிரி, ஹமாஸ் போராளிகளுக்காகவே, இந்த விசேட செய்தியை விடுத்திருக்கிறார் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்தார்கள்.

(சி)

# சிம்பாப்வே எதிர்க்கட்சித் தலைவர் கைது! 9 மணித்தியாலங்களின் பின்னர் விடுதலை

ஹராரே,ஜூன் 06

சிம்பாப்வே எதிரணியான ஜனநாயக மாற்றத்துக்கான கட்சியின் தலைவர் மோர்கண் ஸ்வான்கிராய், புதன்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு 9 மணித்தியாலங்கள்வரை தடுத்து வைக்கப்பட்டார் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

இன்னும் நான்கு வாரங்களுக்குள் மீள நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலையொட்டி அரசு தனது கெடுபிடிகளை இறுக்கத் தொடங்கியுள்ளது என்பதையே இது காட்டுகிறது என எதிர்க்கட்சிப் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜூன் 27 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் மீள நடைபெறவுள்ளது. இதில் ஜனாதிபதி ரொபர்ட் முகபேயும், மோர்கன் ஸ்வான்கிராயும் போட்டியிடுகிறார்கள். வெளிநாட்டில் தங்கியிருந்த எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதிக்கு இப்போட்டியில் முகங்கொடுப்பதற்காக 12 நாள்களுக்கு முன்னர்தான் நாடு திரும்பினார்.

மோர்கன் ஸ்வான்கிராயும் அவரது ஜனநாயக மாற்றத்துக்கான கட்சியின் 14 உறுப்பினர்களும் புதன்கிழமை புலலேயோ என்னுமிடத்திற்கு வடக்கே யுள்ள லூபேன் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். பின்னர் தடுத்து வைக்கப்பட்டு 9 மணித்தியாலங்களுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டார்கள் என்றும் அப்பேச்சாளர் ஜோர்ஜ் சிபோட்ஸ்ஹிவி விவரித்தார்.

(சி)

# விலகுகிறார் ஹிலாரி

வாஷிங்டன், ஜூன்06

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் களத்திலிருந்து விலகும் முடிவை ஹிலாரி கிளின்ரன் நாளை சனிக்கிழமை அறிவிக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் போட்டியில் ஒபாமா முன்னிலைபெற்று, வேட்பாளராகத் தேர்ந்தெடுப்பது உறுதியாகி உள்ளது. இதனையடுத்து ஹிலாரி போட்டியிலிருந்து விலகிக் கொள்வார் எனக் கூறப்பட்டது.

இதுதொடர்பாக ஹிலாரி அதிகாரபூர்வமான எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை. இந்நிலையில் நாளை சனிக்கிழமையன்று அவர், வாஷிங்டனில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரை நிகழ்த்த இருக்கிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அப்போது போட்டியிலிருந்து விலகிக் கொண்டு ஒபாமாவுக்கு ஆதரவு தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(சி)

## டென்மார்க் தூதரக தாக்குதலுக்கு அல் - குவைதா பொறுப்பேற்பு

இஸ்லாமாபாத், ஜூன் 06

பாகிஸ்தானிலுள்ள டென்மார்க் தூதரகத்துக்கு அருகில் கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு அல்-குவைதா உரிமை கோரியுள்ளது.

இக்குண்டுத் தாக்குதலில், 8 பேர் கொல்லப்பட்டனர். நாற்பதுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். தூதரக வளவில் நிறுத்தப்பட்டிருந்த பலவாகனங்கள் சேதமடைந்தன.

(சி)


# CAD & BS

DIPLOMA IN COMPUTER AIDED DRAFTING AND BUILDING STUDIES





கட்டடத்தொழில் நுட்பவியலாளர்கள், கட்டடத்தொழில் நுட்ப மாணவர்கள், க.பொ.த (உ/த) கற்றோர் கவனத்திற்கு! உங்களுக்காகவே நவீன தொழில்நுட்ப யுக்திகளை உங்கள் துறையில் பிரயோகிக்கதக்க வகையில் வடிவமைக்கப்பட்ட விசேட கற்கைநெறி.

| | |
|---|---|
| Starts on | 21st June 2008 at 10.00 a.m. |
| Duration | 6 months (Part Time) |

Course Objective :

Sufficient background knowledge to those who seek employment as CAD Draftsman or Supervisor/ Technician, and/or want to proceed his/her studies in the field and, an in-depth knowledge to those who are already employed in the field in such categories.

Course Contents :

- Building Technology
- Construction Materials
- Building Services
- Building Drawings
- Quantity Surveying
- Basic Theory of Structures
- Computer Aided

IIS CITY CAMPUS
No. 200, Sivan Pannai Road, Jaffna.
Tel : 021 222 8060


# 21ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் திருமதி நகுலேஸ்வரி கிருஸ்ணன்

மண்ணில் 18*02*1947 — விண்ணில் 15*05*2008

நெஞ்சம் குமுறுகிறோம் நெடிய நின்பிரிவினாலே
தஞ்சம் இன்றி வாழ்கின்றோம் தவியாய்த் தவிக்கின்றோம்
அஞ்சேலென்று நமக்காறுதல் கூற இங்கு யாருமில்லை
நெஞ்சத்தால் எண்ணுகிறோம் 21 ஆம் நாள் நினைவின்று
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

கடந்த 15.05.2008 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் திருமதி நகுலேஸ்வரி கிருஸ்ணன் அவர்களின் 21ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும்-

இன்று (06.06. 2008) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன.

அத்தருணம் தாங்கள் வருகைதந்து அவரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 28, துரைராஜா வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்கள்

## பி.வி. சண்முகநாதன்

(இளைப்பாறிய பொறியியலாளர், கட்டடத் திணைக்களம்- யாழ்.)



புலோலி, கந்தஉடையார் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் அன்னை இல்லம், பாடசாலை வீதி, வதிரி,கரவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட பரமு விநாயகம் சண்முகநாதன் (இளைப்பாறிய பொறியியலாளர்) 02.06.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு விநாயகம் (இளைப்பாறிய பிரதம தபாலதிபர்)- திருமதி வள்ளிப்பிள்ளை பரமு விநாயகத்தின் மகனும், காலஞ்சென்ற பழனிப்பிள்ளை முருகுப்பிள்ளை- லட்சுமிப்பிள்ளையின் மருமகனும், திருமதி திலகநாயகியின் அன்புக்கணவரும், திலகநாதன் (கணித விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்), கைலாஸ் (விஞ்ஞானபீடம், 2ஆம் வருடம், பேராதனை பல்கலைக்கழகம்), உமா (யாழ். மருத்துவபீடம், புகுமுக மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற நகுலேஸ்வரி, பத்மாசனி (கொழும்பு), காலஞ்சென்ற விஜயலக்ஸ்மி, லயன் சிவகுமாரன் (ஓய்வுபெற்ற சிரேஸ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகார சபை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வேலாயுதம் (ஓய்வுபெற்ற பதவிநிலை உத்தியோகத்தர், உள்ளூராட்சித் திணைக்களம்), காலஞ்சென்ற துரைராஜா (பிரதம லிகிதர், நெடுஞ்சாலைத் திணைக்களம்), திருமதி றஞ்சிதமலர், காலஞ்சென்ற தர்மலிங்கம் (பி.எம்.ரி), இலக்குமி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்களான தங்கத்துரை, பரராஜசிங்கம், பழனிப்பிள்ளை, விமலாம்பிகை (இலக்குமி தொலைத் தொடர்பகம்) ஆகியோரின் மைத்துனரும், சுஜர்சன் ( Q.S லண்டன்), சுதாகினி (கொழும்பு), ஆகியோரின் பெரிய தகப்பனாரும், விக்னேஸ்வரலிங்கம் (ஜேர்மனி), ரவீந்திரலிங்கம் (கனடா), பிரபாகரலிங்கம் (லண்டன்), கர்மரஞ்சினி, முருகாம்பிகை (வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி) மதன்ராஜ் (இறுதியாண்டு CIMA, கொழும்பு), காலஞ்சென்ற கிரிரன்ராஜ், ரமேஸ் (பொறியியலாளர்), சுரேஸ் (பொறியியலாளர், கொழும்பு), கதிரவேற்பிள்ளை (நிதிஉதவியாளர், பிரதிமாகாண சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம், வவுனியா), சிவசுப்பிரமணியம் (தொழில்நுட்ப அலுவலர், யாழ்.தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை), நந்தகோபால் (வவுனியா), விக்னேஸ்வரன் (ஆசிரியர், மாலைதீவு), கலாராணி (ஆசிரியை, ஸ்கந்தபுரம் மகாவித்தியாலையம், வவுனியா), புவனராணி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், கலாமதி, லோகேஸ்வரி, காலஞ்சென்ற வள்ளிநாயகிஅம்மா, கமலாதேவி ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.06.2008) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9 மணியளவில் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி- திலநாயகி சண்முகநாதன்,
பிள்ளைகள்,
லயன் சிவகுமாரன் (சகோதரன்)

தொ.பே. 021 226 3067

## சின்னத்தம்பி சின்னராசா (செல்வராசா)



புதிய செம்மணி வீதி, ஞானவைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கட்டப்பிராய், 3ஆம் கட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னராசா (செல்வராசா) 03.06.2008 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06. 2008) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் கட்டை, கட்டப்பிராய்,
இருபாலை தெற்கு.

(751157)

தகவல்:
தருமராசா
(மைத்துனர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெஹிவளை ரயில் தண்டவாளக் குண்டு வெடிப்பின் சூத்திரதாரி ஈரற்பெரியகுளத்தில் சிக்கினாராம்!

கொழும்பு, ஜூன் 06

தெஹிவளை ரயில் தண்டவாளக் குண்டுவெடிப்புடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் வத்தளைப் பகுதியைச் சேர்ந்த ஜதீசன் பாலசுப்பிரமணியன் (வயது - 30) என்பவர் நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்.

இவர் நேற்றுமுன்தினம் இரவு கொழும்பிலிருந்து வவுனியா சென்ற வேளை ஈரற்பெரிய குளப்பகுதியில் ஊர்காவற்படையினர் வழிமறித்தபோது தப்பியோட முயற்சித்தார் என்றும் -

இந்தக்குண்டு வெடிப்புடன் தாம் தொடர்புபட்டிருப்பதை அவர் ஒப்புக்கொண்டார் என்றும் -

மோதரைப் பகுதியில் வசிக்கும் நபர் ஒருவரே மேற்படி குண்டைத் தமக்குத் தந்தார் என்றும் -

அந்தச் சந்தேக நபர் கூறினார் என்று பாதுகாப்புப் பிரிவின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட இந்த நபர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு கடும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், இந்தக்குண்டு வெடிப்பின் பின்னர் தெஹிவளைப் பகுதியில்பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளில் 9 தமிழர்கள் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பிறிதொரு தகவல் தெரிவித்திருக்கிறது.

இவர்கள் தெஹிவளைப் பொலிஸ் நிலையத்தில் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று மேலும் கூறப்பட்டது. (சி)

# வெள்ளைவானில் வந்தோரால் யாழ். நகர் இளைஞர் கடத்தல்

கைது செய்யப்பட்டு மூன்று மாதம் தடுத்து வைத்திருந்து பின்னர் கடந்த ஏப்ரல் மாதம் விடுக்கப்பட்ட யாழ். நகர் இளைஞர் ஒருவர் அண்மையில் வெள்ளைவானில் வந்தோரால் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார் என அவரது சகோதரனும், உறவினர்களும் வாழ்க்கைத் தொழில் தொழில்நுட்பப் பயிற்சி பிரதி அமைச்சருமான பெ. இராதாகிருஷ்ணனிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

- இவ்வாறு பிரதி அமைச்சரின் ஊடகப் பிரிவின் செய்திக் குறிப்பில் தெரிவிப்பட்டுள்ளது. அதில் மேலும்தெரிவிக்கப் பட்டவை வருமாறு:-

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகம் வர்சீகன் (வயது - 24) என்ற இளைஞரே கொழும்பு கதிரேசன் வீதியில் வைத்துக் கடந்த மே மாதம் 10ஆம் திகதியன்று இவ்வாறு கடத்தப்பட்டுள்ளார்.

இந்த இளைஞர் கடந்த ஒருவருடமாகக் கொழும்பு டாம் வீதியில் வசித்துவந்தார். கடந்த ஜனவரி 4ஆம் திகதி மாளிகாவத்தை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இவரைக் கைது செய்து மூன்று மாதம் தடுத்து வைத்திருந்தபின்னர் கடந்த ஏப்ரல் 4ஆம் திகதி விடுவித்தனர். இவரது கடவுச்சீட்டு மற்றும் இதர தஸ்தாவேஜிகளும்மாளிகாவத்தைப் பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டிருந்தன. விடுவிக்கப்பட்டபோது கடவுச்சீட்டு இதர தஸ்தாவேஜிகளும் காணாமல் போய்விட்டனஎனப் பொலிஸார் தெரிவித்திருந்தனர். (சி)

# படையினர் - புலிகள் புதனன்று பாலமோட்டைப் பகுதியில் மோதல்

கொழும்பு, ஜூன் 06

வவுனியா பாலமோட்டைப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சமரில் 10 இராணுவத்தினர் உயிரிழக்க மேலும் 18 பேர் படுகாயமடைந்தனர் என்று புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

பாலமோட்டைப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலையை நோக்கி நேற்றுமுன் தினம் 11 மணியளவில் செறிவான பிற்களச்சூட்டாதரவுடன் இராணுவத்தினர் முன்னேற முயன்றனர் என்றும் புலிகள் மேற்கொண்ட முறியடிப்புத் தாக்குதலில் இராணுவத்தினர் பாரிய இழப்புகளுடன் தமது பழைய நிலைகளை நோக்கிப் பின் நகர்ந்தனர் என்றும் புலிகள் தரப்பில் கூறப்பட்டது.

### முகமாலைப் பகுதியில்

இதேவேளை, யாழ்ப்பாணம் முகமா லைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற மோதலில் விடுதலைப் புலிகளில் ஒருவர் உயிரிழக்க மேலும் இருவர் படுகாயமடைந்த னர் என்றும் தமது தரப்பில் ஒருவர் உயிரிழந்தார் என்றும் மேலும் ஒருவர் படுகாயமடைந்தார் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் முன்னரங்க நிலைகளில் நேற்று முந்தி னம் இடம்பெற்ற மோதலின்போது விடுதலைப் புலிக ளில் 9 பேர் உயிரிழந்தனர் என்றும் தமது தரப்பில் ஒருவர் படுகாயமடைந்தார் என்றும் படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது.

அதேசமயம் வவுனியா முன்னரங்க நிலைகளில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகளில் பதிணங்கு பேர் உயிரிழந்னர் என்றும் மேலும் 13 பேர் காயமடைந்த னர் என்றும் தமது தரப்பில் எவ்வித சேதமும் இல்லை என்றும் படைத் தரப்பில் அறிவிக்கப்பட்டது. (சி)

## வெள்ளவத்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகின்றது.

3 கிலோகிராம் நிறையுடைய சி -4 ரக வெடிபொருள்கள், டெட்டனேட்டர் கருவிகள் - 05, மைக்ரோ பிஸ்டல் - 01 மற்றும் அதற்குப் பயன்படுத்தப்படும் மகஸின் - 01 ஆகியவற்றையே பொலிஸார் கண்டுபிடித்து மீட்டனர் எனத் தெரிவிக்கப் பட்டது.

இதுதொடர்பில் வெள்ளவத்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில்அவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்றும்,

மட்டக்களப்பு, புளொட் அமைப்பின் அலுவலகத்திற்கு முன்னர் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிபிரயோகத்தில் உயிரிழந்துள்ளார். அத்துடன், இன்னுமொரு உத்தியோகத்தரும் சம்பவத்தில் காயமடைந்துள்ளார் என்றும் தெரிவிக்கப் பட்டது.

சம்பவத்தின் பின்னர் அந்தப் பகுதிகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்ற அறிய முடிகிறது. (சி)

## ரணிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பகுதியில் ரயர்களைப் போட்டு எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்றும் -

ரணிலை நாடாளுமன்றத்திற்குச் செல்ல விடாது ரணிலின் வாகனத்தை மறித்து அவர்கள் தங்களின் வாகனங்களை இரண்டு, மூன்று தடவைகள் ரணிலின் வாகனத்துக்கு முன்னால் குறுக்காக ஓட்டிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், ரணிலின் பாதுகாப்புப் பிரிவினர் நிலைமையை சமாளித்து ஒருவாறு ரணிலை அவரது வாகனத்துடன் பாதுகாப்பாக நாடாளுமன்றக்குக் கூட்டிச் சென்றனர். (சி)

## யாழ்.மேல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றிய எம்.இளஞ்செழியன் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

திருமலை மாவட்ட நீதிபதியாக பணியாற்றிய திருமதி சந்திரமணி சிவபாலன் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணியான எஸ். கலீல் ஆகியோர் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பதவிப் பிரமா ணம் செய்து கொண்டனர்.

இ.த.விக்னராஜா மேல்நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டதை அடுத்து யாழ்.மேலதிக நீதிவானாகப் பணியாற்றிய இ.வசந்தசேனன் யாழ்.மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.மேலதிக நீதிவானாகவும் மேலதிக மாவட்ட நீதிபதியாகவும் திருமதி ஜோய் மகாதேவன் நியமிக் கப்பட்டுள்ளார்.

## நாகர் கோயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னருக்கு பலத்த உயிரிழப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன - என்றார் இளந்திரையன்.

## வெள்ளவத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரியுமான ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

இத்தேடுதல், கல்கிஸை, தெஹிவளை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி பகுதிகளில் நடைபெற்றுள்ளன. கல்கிஸைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது முக்கிய சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் எனவும் தெரிவிக் கப்படுகிறது. இதேவேளை, தெஹிவளைப் பகுதியில் 12 பேரும், வெள்ளவத்தையில் 4 பெண்கள் உட்பட 23 பேரும் கைதாகியுள்ளனர்.

இதில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறியவர்களும், இங்கு தங்கியிருப்பதற்கான காரணத்தை தெரிவிக்காதவர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் எனவும் - வெள்ளவத்தை பொலிஸார் அவர்களிடம் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அவர் மேலும் கூறினார். (சி)

## பயங்கரவாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது.

இதனால் சிலரது அமைதி குலைந்து போயுள்ளது. அவ்வாறானவர்களே மனித உரிமை மீறல் தொடர்பான குற்றச்சாட்டை இந்நாட்டுக்கு எதிராக முன்வைக்கின்றனர்.

அதிகாரத்தைப் பெற எதையும் செய்யலாம் என்று அவர்கள் நினைக் கக்கூடாது. இந்த நிலைமையை சாதா ரண மக்கள் நல்ல முறையில் விளங்கி வைத்துக்கொண்டுள்ளனர்.

கிழக்கில் அமைதியின்மையைத் தோற்றுவிக்கவும் சில சக்திகள் முயலு கின்றன. அதற்கு நாம் இடமளியோம்.

பயங்கரவாதிகள் கிழக்கில் மாத்திரமின்றி எங்கும் பிரச்சினைகளைத் தோற்றுவிக்க முற்படுகின்றனர்.

கடந்த ஒரு மாதத்தில் இடம்பெற்ற சண்டையின்போது முப்படையினரையும் பொலிஸாரையும் சேர்ந்த 108 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 549பேர்காயமடைந்துள்ளனர்.

அதேபோல்பொது மக்களில் 63 பேரும் கொல்லப் பட்டுள்ளனர். இந்த அறிக்கையை நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்கவில்லை. பயங்கரவாதத்தை ஒழிப்பதன் மூலம் தான் இவ்வாறான புள்ளிவிவரங்களை நிறுத்த முடியும் - என்றார் (சி)

## மன்னாரில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் பதுங்குகுழிகளை இலக்குவைத்தே இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்று படைத்தரப்பில் தெரிவிக்கப் பட்டது. (சி)

## காத்தான் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, வன்முறையில் ஈடுபட்ட கும்பலைக் கலைப்பதற்கு விசேட அதிரடிப்படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

### அதிரடிப் படையினர் துப்பாகிப் பிரயோகம்

தாக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்ட முஸ்லிம் வர்த்தகரை வீதியில் நிறுத்தி அவர் காயமடையவில்லை என்பதையும் அதிரடிப்படையினர் காண்பித்துள்ளனர்.

ஆரையம்பதிக்கு வர்த்தக நடவடிக்கைகளுக்காகச் சென்ற இந்த முஸ்லிம் வர்த்தகர் அங்கு அச்சுறுத்தப்பட்டுள்ளார். அவரது உடைகள் கிழிக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்தே அவர் கத்தியால் குத்தப்பட்டார் என்ற வதந்தி பரவியுள்ளது எனக் கூறப்பட்டது.

### அம்புலன்ஸ் மீதும் தாக்குதல்

இதேவேளை, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையிலிருந்து மட்டக்களப்பு மருத்துவமனைக்குச் சென்றுகொண்டிருந்த அம்புலன்ஸ் மீதும் இனந்தெரியாதவர்கள் முற்பகல் 11 மணியளவில் மேற்கொண்ட தாக்குதலில் 6 நோயாளிகளும் 3 மருத்துவப் பணியாளர்களும் காயமடைந்தனர்.

காயமடைந்த 6 பேரும் முஸ்லிம்கள் எனவும் முஸ்லிம் குழுவொன்றே அம்புலன்ஸ் மீது கற்களை வீசித் தாக்கியதாகவும் பொலிஸார் கூறுகின்றனர்.

இதனைத் தொடர்ந்து இந்தச் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பு மருத்துவமனை ஊழியர்கள் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை மேற்கொண்டனர். மருத்துவப் பணியாளர்களுக்கும் அம்புலன்ஸ்களுக்கும் உரிய பாதுகாப்பை அதிகரிக்குமாறு அவர்கள் கோரினர்.

நேற்றுத் திடீரென மூண்ட பதற்ற நிலையைத் தொடர்ந்து மட்டக்களப்பு நகரிலும் காத்தான்குடிப் பகுதியிலும் உள்ள பாடசாலைகள் அவசர அவசரமாக மூடப்பட்டன. நகரம் வெறிச்சோடியது. பாதுகாப்புப் படையினர் மேலதிகமாகக் குவிக்கப் பட்டனர். ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

### பாடசாலைகள் அவசர அவசரமாக மூடப்பட்டன

காத்தான்குடியில் கடந்த சில நாள்களாக இடம்பெற்ற கதவடைப்பு முடிவிற்கு வந்து இயல்பு நிலை திரும்பிய ஓரிரு மணித்தியாலங்களில் வன்முறைகள் திரும்பவும் மூண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வன்முறைகளில் வாகனம் ஒன்று எரியூட்டப்பட்டதாகவும், சில கடைகளின் பொருள்கள் சூறையாடப்பட்டு வீதியில் போட்டுளிக்கப்பட்டனஎன்றும்கூறப்பட்டது.

இதேவேளை, நேற்றைய சம்பவங்களில் படுகாயமடைந்து மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவர் மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்புக்கு மாற்றப்பட்டார் என வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் கே.முருகானந்தம் தெரிவித்தார். (அ-சி)

மாணவர்களே...!
இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட பட்ட மற்றும் பட்டமேற்படிப்பை தொடர்வதற்கான அரிய சந்தர்ப்பம்
UK Student visa
September 2008 கல்வி ஆண்டு, மாணவர்களுக்கான பதிவுகள் எமது நிறுவனத்தில் மேற்கொள்ளப்படுகின்றன
இன்றே நாடுங்கள்...
Part time JOB - Students are allowed to work up to 20 Hours per week during term- time, any number of hours during vacations.

| Undergraduate Courses | Postgraduate Courses |
|---|---|
| Bsc (Hons) in computing<br>Bsc (Hons) in Businees Information Technology<br>BA (Hons) Accounting and Financial Management<br>BSc (Hons) Businees Management | Postgraduate Diploma in Distributed Computing Systems/ Msc, Postgraduate Diploma in Computing/ Msc, Postgraduate Diploma in Internet Technology and e-commerce/ Msc Postgraduate Diploma in Computer System & Networking, Masters in Busines Administration- MBA, Executive Masters in Business AdministrationEMBA |

northumbria UNIVERSITY
University of Portsmouth
IDM
இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனிக்கல்லூரி
216 நாவலர் வீதி யாழ்ப்பாணம். 021-2229901

பொருளியல்
P.சண்
A/L 08 புதன் வெள் 2.15pm
A/L 09 சனி ஞாயி 1.00pm
A/L 10 சனி ஞாயி 2.00pm
PAPERCLASS சனி ஞாயி 3.00pm
யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)

விக்னா
கல்வி நிறுவனம்
தலைமையகம்
52,ஸ்ரான்லி வீதி, யாழ்.
அளவையியல்
திரு.கமல்
A/L 2009 Sat9.00
விஞ்ஞானமும் விஞ்ஞானமுறையும் பகுதி II
A/L 2010 Sat 10.00
எடுப்புக்கள்
ஆரம்பம் 07.06.08

A/L 2010
வரலாறு
By.திரு .ஜெயா
ஆரம்பம்
9.6.2008
திங்-3 PM
அரசியல்
By.திரு. தனபாலன்
சனி, ஞாயி- 12 PM
யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)

BRIGHTMAN
பிறவுண் வீதி யாழ் நகர்.
புதிய பிரிவு
சரளமாக உரையாட
சிங்களம்
பேராசிரியர்
திரு.லீலாக்கிருஷ்ணன்
ஆரம்பம் 07.06.08
SAT 2.30 PM
(SAT/SUN - 2.30)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org